இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22.20

சகோ. காலேப் யோசுவா
போன் : 26490183
11/29, திருமால் நகர் விரிவாக்கம் II
8-வது குறுக்குத் தெரு, பூந்தமல்லி, சென்னை - 600 056.

# கோத்திர வம்சத்தாரில் மாத்திரம் விவாகம்
# Marriage only in the family of the Tribe

**அ) கர்த்தர் செலொப்பியாத்தின் குமாரத்திகளைக்குறித்த காரியத்தில் கட்டளையிடுகிறதாவது: அவர்கள் தங்களுக்கு இஷ்டமானவர்களை விவாகஞ்செய்யலாம்; ஆனாலும், தங்கள் பிதாவின் கோத்திர வம்சத்தாரில் மாத்திரம் அவர்கள் விவாகஞ்செய்ய வேண்டும்.**
**ஆ) இப்படியே இஸ்ரவேல் புத்திரரின் சுதந்தரம் ஒரு கோத்திரத்தை விட்டு, வேறு கோத்திரத்துக்குப் போகாதிருக்கும்; இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின் சுதந்தரத்திலே நிலைகொண்டிருக்க வேண்டும்.**
**இ) இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களின் சுதந்தரத்தை அநுபவிக்கும்படி, இஸ்ரவேல் புத்திரருடைய ஒரு கோத்திரத்திலே சுதந்தரம் அடைந்திருக்கிற எந்தக் குமாரத்தியும் தன் பிதாவின் கோத்திர வம்சத்தாரில் ஒருவனுக்கு மனைவியாக வேண்டும்.**
**ஈ) சுதந்தரமானது ஒரு கோத்திரத்தைவிட்டு வேறொரு கோத்திரத்தைச் சேரக்கூடாது; இஸ்ரவேல் புத்திரருடைய ஒவ்வொரு கோத்திரமும் தன் தன் சுதந்தரத்திலே நிலை கொண்டிருக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறார். எண்.36:6-9**
**உ) இப்பொழுது, கலப்பு விவாகத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. வெள்ளையன் ஒருவன் கறுப்பு நிறப்பெண் ஒருத்தியை விவாகம் செய்து கொள்ளக் கூடாது என்பது என் கருத்து. அவ்விதமாகவே, கறுப்பு நிறத்து ஆண் வெள்ளைப் பெண் ஒருத்தியையோ, அல்லது மஞ்சள் நிறத்தினர் கறுப்பு நிறத்தினரையோ விவாகம் செய்து கொள்ளக்கூடாது. நான் நம்புவது என்னவெனில் பழுப்பு, கறுப்பு, வெள்ளை நிறத்தினர் தேவனுடைய பூந்தோட்டமாக உள்ளனர். அவர்கள் ஒருவருக்கொருவர் இனச்சேர்க்கை செய்து கொள்ளக்கூடாது என்பதே. தேவன் அவர்களை அந்த விதமாகவே படைத்திருக்கிறார். அவர்கள் அந்த விதமாகவே இருக்க வேண்டும் என்பது என் கருத்து. கே.ப.425, பத்தி 166. COD.2:22.**

1. தேவனுடைய சித்தத்தினாலே, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்காக சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான் கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாயிருக்கிற தேவனுடைய சபைக்கும், எனக்கும், தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுது கொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது:

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. இந்த செய்தித்தொகுப்பை உங்களில் எத்தனைபேர்கள் ஏற்றுக்கொள்வீர்கள், எத்தனை பேர்கள் இதற்கு எதிராக போர்முழக்கமிடுவீர்கள் என எனக்குத் தெரியாது. ஆனாலும் நான், ஆவியானவர் என் உள்ளத்தில் தூண்டும் காரியங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளவேண்டும். பரிசுத்த ஆவியானவர் என் வாயிலாக சபைக்கு கூறுவதை ஏற்றுக்கொள்ளுவது, ஏற்றுக்கொள்ளாதது உங்கள் சுதந்திரம். அதில் நான் குறுக்கிட விரும்பவில்லை. இந்த உபதேசத்தை வேதவாக்கியங்களோடு, இக்காலத்திற்குரிய செய்தியோடு இனைத்து மக்களிடம் கொண்டு செல்ல நான் பொறுப்புள்ளவனாயிருக்கிறேன். அது என்னுடைய ஊழிய உக்கிராணப்பொறுப்பு. ஆதலால் நான் அதில் மிக்க கருத்துள்ளவனாயிருக்கிறேன். நீங்கள் அதற்கு செவி கொடுப்பீர்களா அல்லது செவிகொடுக்க மாட்டீர்களா என்பதற்கு பொறுபுள்ளவர்களாயிருக்கிறீர்கள். ஆனாலும் சிலர் ஏற்றுக் கொள்ளாமற்போனாலும் என்ன? அவர்களுடைய ஏற்றுக்கொள்ளாமை, அவர்களுடைய அவிசுவாசம் தேவனுடைய வார்த்தையை, இக்காலத்திற்குரிய செய்தியை, உண்மையை அவமாக்குமோ? அப்படியாக்கமாட்டாதே!

3. தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்திற்குரிய செய்திக்கும் தங்கள் இருதயத்தை திறந்து கொடுத்து, அதை இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, அதை உண்மையும் உத்தமுமாக ஜீவியத்தில் கடைப்பிடித்து ஜீவனம் செய்யவிரும்புகிற அந்த சிறுபான்மையினருக்கு, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவயவமாய் உள்ளவர்களுக்கு, அவர்கள் பக்திவிருத்திக்காக எனது செய்தித்தொகுப்புகள் அனுபப்படவே விரும்புகிறேன். உலக மக்கள் ஆயிரம், பதினாயிரம் பேரிடம் இது சென்றடைய வேண்டும் என்று நான் விரும்புகிறதில்லை. ஆதலால் நான் இலவசமாக உங்களுக்கு அனுப்பிவைக்கும் இந்த செய்தித்தொகுப்புகள் உங்கள் ஆத்துமாவுக்கு பிரயோஜனம் இல்லை என்றால், போதகர் என தன்னை அழைத்துக்கொள்ளும் சென்னை நடுவீரப்பட்டு சகோ.S. ரவீந்திரராஜ் போன்று அநாகரிகமாக திருப்பிஅனுப்பவேண்டாம். சகோ. ரூபன் மாணிக்கராஜ் போன்று நாகரிகமாக **வேண்டாம்** என்று கூறினால் அது ஆரோக்கியமானதாக இருக்கும். இந்த சகோதரருக்கு என்னுடன் உபதேசங்களுக்கடுத்த காரியங்களில், ஆவியில் ஒருமனப்பாடு இல்லாவிட்டாலும் எனது சரீரத்திற்கு தேவையான மருந்து மாத்திரைகளுக்கு அவ்வப்போது ஏற்பாடுகள் செய்து கொடுத்து எனக்கு உதவிகள் செய்து வருகிறார். நான் இவரது உதவிகளையும், நன்கு பழகின இவரது குடும்பத்தினரையும்

மறக்க முடியுமா? முடியாதே! மறப்பேனாகில் நான் கிறிஸ்துவின் உழியக்காரன் அல்லவோ!. ஆனால் இவரது நற்பண்புகள் 300 பேர்களைக் கொண்ட சபைக்கு பாஸ்டர் என பெருமைபாராட்டுகிறவரிடம் இல்லையே! அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். கெட்டமரம் நல்லகனிகளை கொடுக்கமாட்டது. (மத்.7:16,18). பாருங்கள், இவர்களுடைய நடத்தைகள், இவர்கள் யார் என்பதை பிரதிப்பலிக்கிறதே! நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ, அவர்கள் விசுவாசித்தார்கள். சிலர் இடறுகிறார்கள், அவர்கள் அதற்கென்றே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் இந்த செய்தித்தொகுப்புக்களை ஒருவர் ஏற்றுக்கொள்வார். மற்றொருவர் நிராகரிப்பார். ஆனால் அது என் கவலை அல்ல. சகோ. பிரன்காம் விதைத்தார். நான் நீர்ப்பாய்சுகிறேன். விளையச்செய்வது எங்கள் இருவர்களுடைய காரியம் அல்ல. அது தேவனுடைய காரியம். தேவனுடைய காரியத்தில் நாங்கள் தலையிடமுடியாதே, கூடாது!

4. கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, எல்லாவற்றையும் சோதித்து நலமானதை பற்றிக் கொள்ள நான் அனுப்பிவைக்கும் செய்தித்தொகுப்புகள் உங்கள் ஆத்துமாவுக்கு பிரயோஜனம் இல்லை என்றால் **வேண்டாம்** என ஒரு போஸ்ட் கார்டில் எழுதி அனுப்பினால் போதும் அல்லது போனில் **வேண்டாம்** என தெரிவித்தால் போதும் என்பதை உங்களுக்கு திரும்ப திரும்ப கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. உங்களுக்கு இந்த செய்தித்தொகுப்பில் ஒருமனம் ஏற்பட்டால், அதற்காக தேவனை ஸ்தோத்தரித்து நன்றி செலுத்துங்கள். ஒருவேளை என்னோடு ஒருமனம் ஏற்படாவிட்டால் அதற்காக என்னை தூற்றித்திரியாதீர்கள், மாறாக எனக்காக ஜெபியுங்கள். என்னைப்பொறுத்த அளவில் நான் ஆற்காடு முதல் ரகம் பிரியாணியை உங்கள் முன் வைத்துள்ளேன். இதை நீங்கள் நன்கு ருசித்து சாப்பிடுங்கள். ஒருவேளை உங்கள் கண்களுக்கு ஆங்காங்கே ஒருசில எலும்புகள் தென்பட்டால் அதையெடுத்து ஓரமாக ஒதுக்கி வைத்துவிடுங்கள். ஒருசில எலும்புகள் உங்கள் பார்வைக்கு காணப்பட்டது என்பதற்காக மொத்தமாக பிரியாணியை வெளியே கொட்டிவிடாதீர்கள். நீங்கள் என்னுடன் இணங்காமல் நான் தவறு என்று கூறலாம். அப்படிசொல்ல உங்களுக்கு உரிமையுண்டு. ஆனால் அப்படி சொல்லுகிறதுக்கு முன் தேவனுடைய வார்த்தை, இக்காலத்திற்குரிய செய்தி **கலப்புத்திருமணம்** குறித்து என்ன கூறுகிறது என்பதை என்னுடன் சேர்ந்து ஆராய்ந்து பாருங்கள். சத்திய ஆவியானவர் நம்மை சகலசத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார். பெரோயா பட்டணத்தார் காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தார்கள். ஆதலால் அவர்கள் நற்குணசாலிகள் எனப் பேர் பெற்றார்கள். (அப்.17:10,11)

6. இக்காலத்திற்குரிய செய்தியிலுள்ள மக்கள் மத்தியில் **கலப்புத்திருமணம்** செய்வதில் தவறு எதுவும் இல்லை, திருமண அடையாளமாக மோதிரமோ அல்லது தாலிகொடியோ எதுவும் அணியக்கூடாது போன்ற உபதேசங்கள் எப்படி நுழைந்தது? ஸ்தாபனசபைகளில் இருந்து, விசேஷமாக பெந்தெகொஸ்தே சபைகளில் இருந்து இக்காலத்திற்குரிய செய்திக்குள் வந்த ஊழியர்கள், விசுவாசிகள் தங்கள் பழைய ஸ்தாபன பாரம்பரிய உபதேசங்களை, பழக்கவழக்கங்களை தங்களுடன் கொண்டு வந்ததே அதற்கு காரணம். ஸ்தாபன பெந்தெகொஸ்தே சபைகளில் தான் கலப்புத்திருமணம் அதிகம். அதை அவர்கள் விட்டு விலக விரும்பவில்லை. அதிலே மோகம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அடுத்து அவர்கள் மனைவி மோதிரம், தாலிகொடி எதுவும் திருமண அடையாள சின்னமாக அணிவதில்லை. அவர்கள் இக்காலத்திற்குரிய செய்திக்குள் வந்த பிறகும் அந்த பழைய பாரம்பரிய நிலையிலேயே இருக்க விரும்புகிறார்கள். அதை மாற்ற அவர்களுக்கு விருப்பமில்லை. தாலிகொடி அல்லது மோதிரம் எதையும் அடையாள சின்னமாக அணிவது அவர்களுக்கு அவமானம் என்று நினைக்கிறார்கள். ஆக இந்த ஸ்தாபன பெந்தெகொஸ்தே மக்கள் இக்காலத்திற்குரிய செய்திக்குள் வந்தபிறகும் தங்கள் பழைய கோட்பாடுகளை விட்டு வெளியே வராமல் அதோடு ஒட்டிக்கொண்டார்கள். அதோடு மட்டுமில்லாமல் அந்த பாரம்பரியத்தை இக்காலத்திற்குரிய செய்தியிலுள்ள மக்கள் மத்தியிலும் நுழைத்து, அதை உபதேசமாக கொண்டுள்ளார்கள். இவர்களும் ஸ்தாபனங்களைப் போன்று குற்றவாளிகளாய் இருக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய வார்த்தையை, இக்காலத்திற்குரிய செய்தியை நன்கு அறியாத மக்களை தங்களது ஸ்தாபன பராம்பரிய உபதேசங்களினால் ஏமாற்றுகிறார்கள், வஞ்சிக்கிறார்கள். வலசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல் தன் சபை மக்களை இந்த விஷயத்தில் தவறான பாதையில் வழிநடத்தி வருகிறார்.

7. இவர்கள் நகை போடமாட்டோம், திருமணத்தில் ஆண், பெண் செய்துகொண்ட நல்மனச்சாட்சியின் உடன் படிக்கைக்கு அடையாளமாக மோதிரம் அல்லது தாலிகொடி எதுவும் அணியமாட்டோம். நகை சுத்தமாக ஆகவேஆகாது. சேசே, No No என்பார்கள். இவர்கள் பகல்வேஷத்தை, அக்கிரமத்தை எடுத்துக்காட்டுகிறார் சகோ. சாலொமோன், தூத்துக்குடி மாவட்டம். **தினத்தந்தி** பத்திரிக்கையில் இந்நாட்களில் வெளிவந்த செய்தி ஒன்றை நீங்கள் கீழே காணலாம்.

## “நகை வேண்டாம் பணமா கொடுங்க”

எனது நண்பரின் திருமண நிச்சயார்த்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நண்பர்களுடன் சென்று இருந்தேன். நண்பனின் பெற்றோர் ஒரு மதத்தின் குறிப்பிட்ட பிரிவை சேர்ந்தவர்கள். அந்த மத பிரிவில், நகை பிரச்சினை, வரதட்சணை பற்றி பிரச்சினை இருக்காது என சந்தோஷமாக கலந்து கொண்டோம்.

பெண் வீட்டார் பெண்ணுக்கு 30 சவரன் நகை போடுவதாக சொன்னார்கள். தன் பெண் மேனியில் நகை போட்டு பார்க்க வேண்டும் என்ற ஆசை அவர்களுக்கு இருந்தது. ஆனால் மாப்பிள்ளை வீட்டார் நகை எதுவும் போடக் கூடாது. ரொக்கமாக 3 லட்சம் ரூபாய் வரதட்சணையாக கூறினார்கள். இத்தனைக்கும் மாப்பிள்ளை வீட்டைச் சார்ந்த பெரியவர்கள் வாரந்தோறும் ஒன்று கூடி பிரார்த்தனை செய்பவர்கள். வரதட்சணை வாங்கவே கூடாது என்று பலர் முன்னிலையில் அவர்கள் பேசுவது கண்டு நான் பெருமிதம் கொண்டதுண்டு.

மாப்பிள்ளை வீட்டாரின் பிடிவாதமான போக்கால் திருமண நிச்சயதார்த்தம் தடைப்பட்டு விட்டது. ஊருக்கு உபதேசம் செய்பவர்கள் தங்கள் வீட்டு விசேஷங்களில் அதை கடைபிடிக்க மறுக்கிறார்களே என என் மனது வேதனைப்பட்டது.

அ.சாலமோன்

**தினத்தந்தி** இலவச இணைப்பு 19.03.2006

உண்மையாகவே இதுதான் ஸ்தாபன பெந்தெகொஸ்தே சபையின் நாகரிகம். பாஸ்டருக்கு இந்த மூன்று லட்சத்தில் தசமபாகமாக ரூ.30,000/- கிடைக்கும். ஆதலால் பாஸ்டர்களும் இந்த வரதட்சணையில் ஜாக்கிரதையாக இருந்து, எந்த அளவுக்கு பெண் வீட்டாரிடம் இருந்து பணம் கூட்டி வாங்கமுடியுமோ, அந்த அளவுக்கு முயற்சி எடுத்து அதன்மூலம் தங்கள் வருமானத்தை கூட்ட முயற்சி எடுப்பார்கள். திருமணத்தில் நகைக்கு பதிலாக வரதட்சணையை ரொக்கமாக கூட்டித்தாருங்கள் எனக் கூறி அந்த கொள்கையை ஆதரிக்கும்

ஸ்தாபன பெந்தெகொஸ்தே சபை பாஸ்டர்களே உங்களுக்கு ஐயோ! அவர்களுடைய துர்க்கிரியைகளுக்கு உடன் பங்காளிகளே உங்களுக்கும் ஐயோ! நீங்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள். அவைகள் புறம்பே அலங்கரமாய் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும், சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும் அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்: உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள். (மத்.23:27,28).

8. நம் மத்தியில் உள்ள சென்னை சபை, கல்வாரி ஜெபவீடு, இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு போன்ற சபைகள் யாவும் உங்களை ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர விடாதபடி தடுக்கும் தடுப்புச்சுவர்களாக உள்ளன. ஏனென்றால் ஒவ்வொன்றும் தங்களுக்கென பிரத்தியேகமான உபதேசங்களை நடைமுறையில் கொண்டு, தங்களுக்கென பிரத்தியேகமான கூடுகளை உண்டாக்கி அதில் தங்கள் மந்தையில் உள்ள ஆடுகளை அடைத்து, அவைகள் சத்தியத்தை அறிந்து அதில் வளர விடாதபடிக்கு தடுத்து வருகிறது. பிரியமானவர்களே நீங்களோ சுயதீனாம் உள்ளவர்களாக இருங்கள். எந்த சபைக்கும், எந்த பாஸ்டருக்கும் அடிமைகளாகாதீர்கள்.

9. என்னை பொருத்த அளவில் நமது மத்தியில் அநேக சமூக பிரிவுகள் உண்டு. அதைத்தான் நாம் ஜாதி என்று அழைக்கிறோம். ஆக சமூக பிரிவு அல்லது ஜாதி என்பது: ஒன்றுக்கொன்று வேறுபட்ட, வழிவழியான சமூக கட்டுப்பாடுகள், தத்துவங்கள், தொழில்கள், வாழும் நெறிமுறைகள், திருமணச்சடங்குகள், வாழ்க்கை நடைமுறைகள், பாரம்பரியங்கள், நம்பிக்கைகள், மரபுகள், பண்பாடுகள், கலாச்சாரங்கள் கொண்ட சமுதாயம். ஒவ்வொருவரின் நன்மைக்காக ஒன்று கூடி வாழும் தனி மனிதர்கள் கொண்ட ஒரு அமைப்பே சமுதாயம். சமுதாயத்தின் அடிப்படை அங்கம் குடும்பங்கள். சுருக்கமாக ஆங்கிலத்தில் கூறப்போனால் Any of the distinct hereditary social class. Any exclusive social or occupational class or group.

10. பறையர், நாடார், தேவர், பிள்ளை, பிராமிணர் போன்ற ஜாதிகள் யாவும் ஒரு சமூக சம்பந்தமான வகுப்பே. ஒருவர், ஒருவகுப்பினர் செய்யும் தொழிலைக் கொண்டு, அவர்கள் ஆசாரியர்கள்(மரவேலை செய்வோர், தச்சர்) மீனவர்கள்(மீன்பிடிக்கும் தொழிலைக் கொண்டவர்கள்), குயவர் (மண்பானைகள் செய்வோர்) என அழைக்கிறோம். இந்த சமூக பிரிவைதான் நாம் வகுப்பு, சமூகம் (Community – a class or a society) என்றும் அழைக்கிறோம். இதைத் தான் நாம் ஜாதி, குலம், இனம் (Tribe) எனவும் அழைக்கிறோம். ஆக பொதுவாக Caste, Tribe, Community என்ற பெயர்கள் அனைத்தும் ஒரு பிரிவு, ஒரு சமூக மக்களையே (Class of people) குறிக்கிறது. இது குறித்து நாம் பல ஜாதியான ஜனங்கள் (Mixed multitude) என யாத். 12:38, எண். 11:4-ல் வாசிக்கிறோம். Caste and Community போன்ற வார்த்தைகள் வேதாகமத்தில் எங்கும் கிடையாது. மாறாக Tribe என்ற வார்த்தையே உள்ளது.

11. இப்பொழுது இங்கு நன்கு கவனியுங்கள். முதலில் ஒருவர் ஒரு தனிப்பட்ட மனிதன் (Man). பின் அவர் ஒரு குடும்பத்திற்குள் வருகிறார். (House hold). அதாவது அவர், அவருடைய மனைவி, மக்கள். பின் இதிலிருந்து அவர் ஒரு வம்சத்திற்குள் வருகிறார். (Family). இங்கு இவர் குடும்பம் மற்றும் இவர் உடன் பிறந்தவர்கள் குடும்பம் ஆகும். இதற்குப்பின் இவர் தன் இனஜன பந்துக்கள் மத்தியில் வருகிறார் (Kindred). இதில் இவருடைய மாமா, மச்சான், அத்தை போன்ற உறவினர்கள் வருகின்றனர். இதன் பின் தான் இவர் ஒரு ஜாதிக்குள், ஒரு சமூக வகுப்புக்குள் வருகிறார். அதாவது இவருடையவர்களை போன்ற பழவழக்கங்கள் கொண்ட, தொழிலை கொண்ட, சமூக சம்மந்தமான ஜனங்கள் வருகிறார்கள். இதைத் தான் நாம் ஜாதி, குலம், இனம், கோத்திரம் என்று பலவாறு அழைக்கிறோம். என்னில் உள்ள ஆவியின் வழிநடத்துதலைக் கொண்டு இதை நான் எழுதுகிறேன். நான் எழுதுவது தவறு என்றால் அதை அப்படியே விட்டு விடுங்கள்.

12. இதற்கு எடுத்துக்காட்டாக நீங்கள் யோசுவா 7:14-18 வசனங்களை தியானிக்கலாம். இங்கு நீங்கள் காண்பீர்களானால் :

அ) யூதாவின் கோத்திரம். வசனம் 16
ஆ) சேராகியரின் வம்சம். வசனம் 17
இ) சப்தி வீட்டார். வசனம் 17,18
ஈ) கர்மீயின் மகன் ஆகான், தனி மனிதன். வசனம் 18

இங்கு கவனியுங்கள் ஒரு தனி மனிதன், பின் அவன் வீட்டார் அதாவது அவன் குடும்பம், பின் அவன் வம்சம், பின் அவன் கோத்திரம்.

13. இன்னும் யோனாவின் சரித்திரத்தை குறித்து பார்க்கும்போது கப்பல் யாத்திரை செய்கிறவர்கள் அவன் இடத்தில் வந்து, உன் தொழில் என்ன? (Occupation) நீ எங்கேயிருந்து வருகிறாய்?, உன் தேசம் எது? (Country), நீ என்ன ஜாதியான்? (People) என்று கேட்டார்கள். யோனா 1:8.

14. மேலும் பவுலும் தன்னை குறித்து கூறும் போது : தான் பென்யமீன் கோத்திரத்தான், இஸ்ரவேல் வம்சத்தான், பரிசேயன், எபிரேயன் எனத் தனது மாம்ச சம்பந்தமான, குலகோத்திர குறிப்புகளை கூறுகிறான். பிலி.3: 5,6. திருமணம் இம்மைக்கடுத்த ஒரு காரியமாக இருப்பதால், நாம் மேற்கண்ட இம்மைக்குரிய காரியங்களை சார்ந்திருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**15. நாங்கள் எங்கள் வீட்டில், பிரன்காம் குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஜீவிப்பதுபோல் ஜீவிக்கிறோம். ஜோன்ஸ் ஆகிய நீங்கள் ஜோன்ஸ் குடும்பத்தார் எப்படி ஜீவிப்பார்களோ அப்படி உங்கள் வீட்டில் வசிக்கிறீர்கள். தேவனுடைய வீட்டில் நாம் தேவனுடைய வார்த்தையினாலும், தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் ஜீவிக்கிறோம். (தேவனால் அருளப்பட்ட ஒரே ஆராதனை ஸ்தலம், பத்தி 238, 239. நாள் 28-11-1965).**

16. பிரியமானவர்களே இதே கருத்தைத் தான் நான் ஆதி முதல் எழுதி வருகிறேன், உபதேசிக்கிறேன், பிரசங்கிக்கிறேன். நீ ஒரு தேவரானால், ஒரு தேவர் குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஜீவிப்பதுபோல் ஜீவனம் செய். நீ ஒரு பிராமிணர் ஆனால், ஒரு பிராமிணர் குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஜீவிப்பதுபோல் ஜீவனம் செய். நீ ஒரு பறையர் ஆனால் ஒரு பறையர் குடும்பத்தினர் ஜீவிப்பதுபோல் ஜீவனம் செய். ஒரு குடும்பத்தினர் ஜீவியத்தை

மற்றொரு குடும்பத்தினர் ஜீவியத்தோடு இணைக்காதே. கலப்படம் செய்யாதே. நீ இப்பிரபஞ்ச வாழ்க்கையிலிருந்து தேவனுடைய சபைக்கு வரும்போது, தேவனுடைய வீட்டாரைப் போன்று, தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் ஜீவனம் செய். இப்பிரபஞ்சத்துக்குரிய வாழ்க்கையையும், ஆவிக்குரிய வாழ்க்கையும் வேறு என்பதை உங்களால் புரிந்துக்கொள்ள முடிகிறதா?

17. ஒரு ஜாதியில், வெவ்வேறு மதங்களைச் சார்ந்தவர்களாக இருப்பினும் அவர்கள் வாழ்க்கை முறை எந்த மதத்தினரானாலும் ஒன்றாகவே உள்ளது. மக்கள் மதங்களை கடந்து தங்களுடைய ஜாதிகளைச் சேர்ந்த மக்களோடு உறவாடிக்கொள்வதையே விரும்புகிறார்கள். இதைத் தான் சென்னை, சூளைமேடு, இயேசு கிறிஸ்துவின் ஜெபவீட்டார் கடைபிடித்து வருகிறார்கள். ஒருவனுக்கு முதலில் இந்தியன் என்ற உணர்வு வருகிறது. அதன் பின் அவன் மாநில உணர்வு வருகிறது. அதன் பின் தன் மாவட்ட உணர்வு வருகிறது. பின் தன் மத உணர்வு வருகிறது. பின் அவன் ஜாதி உணர்வு வருகிறது. இவை இல்லாமல் அவன் இல்லை. இந்த உணர்வுகள் எவ்விதத்திலும் அவனுக்குள் வந்துவிடுகிறது. முஸ்லீம், சீக்கியர்கள், இந்து போன்ற அனைத்து மதங்களிலும் ஜாதி பிரிவுகள் இருக்கத்தான் செய்கின்றன.

18. ஆக, இந்நாட்களில் நாம் ஜாதி, குலம், கோத்திரம் என்பது யாவும், வேதவாக்கிய ஆதாரப் பூர்வமானதே. ஆனால் இதில் நாம் ஏற்றத்தாழ்வுகளை கொண்டுவருகிறோம். இது தான் தவறு. இது தான் கூடாது. நான் உயர்ந்த ஜாதி, நீ தாழ்ந்த ஜாதி என்ற பேச்சுக்கு இடமே இல்லை. அது கூடவும் கூடாது. நாம் அனைவருமே மனிதர்கள், அன்பு சகோதரர்கள் என்பதை உணர்ந்து, ஜாதியில் ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயமாக அனைவரும் இன்புற்று அமைதியாக வாழவேண்டுமென்று நினைக்கிறது ஆன்மீகநேயம் கொண்ட அனைவரின் கடமையாகும். ஒருவர் தன்னுடைய பிறப்பில் தான் உயர்ந்த ஜாதி என்று நினைப்பது மடமையாகும். அதைவிட பிறப்பில் ஒருவன் தான் தாழ்ந்த ஜாதி என்று நினைப்பது மிக மடமையாகும். பண்டைச் சரித்திரத்தை நாம் பார்க்கும்போது திராவிடகுருக்களாக பறையரும், திராவிடசிற்றரசர்களாக பள்ளர்களும், திராவிடஅரசர்களாக நாடார்களும் திகழ்ந்தனர்களாம். (ஆதாரம், டாக்டர் தெ. தேவக்கலா M.A., M.Phil., PhD.,) ஆனாலும் மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் தேவன் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்தார். (அப் 17:26.) இதுதான் உண்மை.

19. நான், ஜாதிகளில் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி உண்டு என்ற பாகுபாட்டை உபதேசிக்க இங்கு வரவில்லை. உயர்ந்த ஜாதிகள் உண்டு, அவர்கள் குடியிருக்கும் தெருக்களில் நாய்களும், பன்றிகளும், கழுதைகளும், இன்னும் ஏனைய மிருகங்களும் நடந்து பவனி செல்லலாம். ஆனால் தாழ்ந்த ஜாதியான் செல்லக்கூடாது. மேலும் அதே உயர்ந்த ஜாதியான் முன் ஒரு தாழ்ந்த ஜாதியான் பேசும்போது கைக்கட்டி, வாய்ப்பொத்தி பேச வேண்டும், அத்துடன் கூனி குறுகி நிற்கவேண்டும் என்று நான் இங்கு போதிக்க, எழுதவில்லை. மாறாக ஜாதிகள் உண்டு, அதாவது சமுதாயம் உண்டு, ஆனால் அவைகள் அனைத்தும் சமம். அவற்றில் உயர்வு தாழ்வு இல்லை என்பதையே போதிக்க இங்கு வந்துள்ளேன்.

20. காலப்போக்கில் ஒரு சமுதாயத்தினர் செய்யும் தொழிலைக்கொண்டு ஜாதிகளில் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற பிரிவினைகள், பாகுபாடுகள் ஊற்றெடுத்தன. இது மனுஷர்களால் உற்பத்தி செய்யப்பட்டதாகும். பின் உயர்ந்த ஜாதியினர், தாழ்ந்த ஜாதியினரை கொடுமைப்படுத்தினார்கள். தீண்டாமைக் கொடுமைகள் முளைத்தெழும்பினது. இந்த தீண்டாமைக் கொடுமையை ஒழித்துக்கட்டவே, தீண்டாமையை எதிர்த்த தூயோர் கலப்புத்திருமணத்தை ஊக்குவித்தனர். கலப்புத்திருமணம் ஆதரிக்கப்பட்டது. தீண்டாமையை ஒழிக்கவே கலப்பு திருமணம் ஆதரிக்கப்பட்டது. **ஜாதி இரண்டொழிய வேறில்லை, ஜாதிகள் இல்லையடி பாப்பா, ஜாதிக்கொரு இடுகாடு, இந்த நிலைமையை மாற்றி அனைவருக்கும் ஒரே இடுகாடு** போன்ற கோஷங்கள் எழும்பின.

21. மேலும் சபைக்குள் அரசியல் நுழைந்ததால், சபையில் பரிசுத்த ஆவிக்கு பதிலாக மனுஷஞானம் நுழைந்ததால், உலக பிரகாரமான மக்கள் சபையை வழி நடத்த ஆரம்பித்ததால் அங்கும் ஜாதியின் உயர்வுத் தாழ்வு காணப்பட்டது. அதைத் தடுக்கவே கலப்புத் திருமணம் சபைக்குள் நுழைந்தது. ஆனால் நாம் காணும் ஜாதியில் சமுதாயத்தில் உயர்வு, தாழ்வு இல்லை. அங்குத் தீண்டாமை இல்லை. ஆதலால் அங்கு கலப்பு திருமணத்திற்கு இடமே இல்லை. அவரவர்கள் தங்கள் தங்கள் ஜாதியில் நிலைத்திருந்து, உயர்வு தாழ்வு அற்ற வாழ்க்கை வாழ ஆதரிக்கப்படுகிறார்கள்.

22. ஜாதிப்பிரிவுகள், சமுதாயப்பிரிவுகளாக இருப்பதால் அதை ஒழிக்க முடியாது. அது கடந்த, நிகழ், வரும் காலங்களிலும் காணப்படும் ஒன்றாகவே இருக்கும்.

23. இந்நாட்டில் மனுஷர்கள் எதில்தான் கலப்பினங்களை உருவாக்கவில்லை? மனுஷன் தன்னில் கலப்பினத்தை உருவாக்குகிறான். மிருகங்களில் கலப்பினத்தை உருவாக்குகிறான். தாவரங்களில் கூட கலப்பினத்தை உருவாக்கிவிட்டான். ஆக இன்றைய உலகில் எங்கும் எதிலும் கலப்படம், கலப்படம்தான். ஆனால் ஆவிக்குரியவர்களாகிய நாமோ எங்கும் எதிலும் ஒரு கலப்படமற்ற சமுதாயத்தை மனுக்குலத்திலும், மிருகத்திலும், தாவரத்திலும் உருவாக்குவோம்.

24. தேவன் ஒன்றை மாத்திரமே அறிவார். அதுதான் இரத்தம். அதை மாத்திரமே அவர் அறிவார். அவர் இரத்தத்தை அறிந்திருக்கிறார். அவருக்கு நிறப்பாகுபாடு ஏதுமில்லை. அவருக்கு இனப்பாகுபாடு ஏதும் இல்லை. மனிதன் கறுப்பு, நீலம், வெள்ளை, பழுப்பு போன்ற நிறமாக இருந்தாலும் தேவனுக்கு அதுக் குறித்து ஒன்றுமே இல்லை. அவர்கள் அவருக்கு குமாரரும் குமாரத்தியுமாயிருக்கிறார்கள். அவர்களை அவர் தமது பூந்தோட்டத்தில் படைத்திருக்கிறார். அவர்கள் உள்ளது போல் அவர்களை காண விரும்புகிறார். அவர்களை அப்படியே விட்டுவிடுங்கள். (**கலப்பு மார்க்கம்**, பக்கம் 36, பத்தி 4).

25. பாருங்கள், தேவனிடத்தில் அதாவது கிறிஸ்துவுக்குள் வெள்ளை நிறத்தான், கறுப்பு நிறத்தான், நாடார், பறையர், தேவர் என்ற பாகுபாடுகள் ஏதும் கிடையாது. ஆனால் அவர் அவர்களை தமது பூந்தோட்டத்தில் எப்படி படைத்திருக்கிறாரோ அவர்களை அப்படியே விட்டு விடுங்கள். உன்னை வெள்ளை நிறத்தில் படைத்திருப்பாராகில், உன்னை கறுப்பு நிறத்தில் படைத்திருப்பாராகில், நீ அதிலே அப்படியே நிலைத்திரு. உனக்கு நாடார் குலத்தில், பறையர் குலத்தில், கோத்திரத்தில் பிறப்பை கொடுத்திருப்பாராகில், பிராமிணர் இனத்தில் பிறக்கச்செய்திருப்பாராகில் நீ அந்த பிறப்பின் இனத்திலே, குலத்திலே, கோத்திரத்திலே நிலைத்திரு. ஒரு இனத்தை, குலத்தை, கோத்திரத்தை மற்றொரு குலத்தோடு இனத்தோடு, கோத்திரத்தோடு கலப்படம்

செய்யவேண்டாம். ஒரு இன குல, கோத்திரத்தின் சுதந்தரம் மற்றொரு இனக் குல கோத்திரத்திற்கு செல்ல வேண்டாம். அது அது அதன்னதன் நிலையிலே நிலைத்திருக்க விட்டு விடுங்கள்.

26. Well look, the coloured man is …. he's got a disposition about him that the white man never does have …. Well, he's got it, and that's his possession; they don't want to mix it up with some other race and break it out, either. That's exactly right. (Hebrews, Q and A…. part III, Page 468, Para 605) அதாவது ஒவ்வொரு குல கோத்திர மக்கள் தங்களுக்கென பிரத்தியேகமான பாதையை உடையவர்களாய் இருக்கிறார்கள். அந்த பாதையை மற்றொரு குல, கோத்திரத்தோடு கலப்படம் செய்யவேண்டாம்.

27. பல வருடங்களுக்கு முன்பு ஒரு சகோதரர் எனக்கு கடிதம் ஒன்று ஒன்பது பக்கங்களுக்கு எழுதியிருந்தார். அதில் இரு பக்கங்கள் கலப்பு திருமணம் குறித்து நான் முன்பு கண்டித்ததை கண்டனம் பண்ணி எழுதியிருந்தார். அதாவது ஆதியிலே தேவன் மிருகங்களையும், பறவைகளையும், ஊரும் பிராணிகளையும், மச்சங்களையும், தாவரங்களையும் தமது வார்த்தையினால் ஜாதி ஜாதியாக படைத்தார். ஆதி. முதல் அதிகாரம். ஆனால் தேவன் மனிதனை மட்டும் ஜாதி ஜாதியாக உண்டாக்கவில்லை. மாறாக தம்முடைய சாயலாக மண்ணினால் மனுஷனை உண்டாக்கினார். ஆதி. 1:27. அவர்களை நீங்கள் பலுகி பெருகுங்கள் என்றார். ஆதி. 1:28. ஆதாம் ஏவாளை கர்த்தர் எந்த ஜாதியைக் கொண்டு அழைத்தார்? ஆதாம் ஏவாள் நாடாரா, பிராமிணரா, அல்லது தேவரா? மேலும் காயீன், ஆபேல் என்பவர்கள் தங்கள் தாயின் வயிற்றிலிருந்து பிறக்கும் போது ஜாதியின் பெயரை நெற்றியில் ஒட்டிக் கொண்டு பிறக்கவில்லை. மிருகங்களில் பல ஜாதிகள் உண்டு. யானை வேறு, பூனை வேறு. அவைகளின் உணவுப் பழக்கங்கள் வேறு. ஆப்பிள் வேறு. அன்னாச்சிப் பழம் வேறு. அதன் ருசிகள் வேறு. அவரைக்காய் வேறு, பூசணிக்காய் வேறு, ரோஜா வேறு, மல்லிகை வேறு. ஒன்றுக்கொன்று நிறங்கள் வேறு, வாசனைகள் வேறு, உருவங்கள் வேறு. வானவில்லுக்கு நிறங்களை கொடுத்த தேவன் மனிதனுக்கும் நிறங்களை கொடுத்து அழகுப்படுத்தினார். ஆதியிலே தேசங்களைத் தழுவியே யூதன் என்றும், கிரேக்கன் என்றும், உரோமியன் என்றும், சமாரியன் என்றும், கலிலேயன் என்றும் பிரிக்கப்பட்டனர். கிறிஸ்தவர்களிடம் ஜாதி துவேஷம் மாறி வருகிற இக்காலத்தில் நீங்கள் கிறிஸ்துவின் சத்தியத்தை ஆழமாக அறிந்திருந்தும் ஜாதி என்ற சாத்தானைப் பற்றிக்கொண்டீர்கள் என என் மீது சாடி எழுதி இருந்தார். ஆனால் அந்தக் கடிதத்தில் அவர் பெயரோ, விலாசமோ கொடுக்கப்படவில்லை. மற்றப்படி அந்நாட்கள் முதல் இந்நாட்கள் வரை ஜாதி குறித்து யாரிடமிருந்தும் எனக்கு தபால் எதுவும் கிடையாது. ஆனால் கோவை ராஜா இந்நாட்களில் அந்த பிரச்சினையை கொண்டு வந்தார். அதன் நிமித்தமாக சிலர் என்னிடம் கேள்விகள் கேட்டனர். என்னிடம் எதுவும் வாக்குவாதம் செய்யவில்லை. ஆனாலும் ஜாதி பிரச்சினைகளில் சில சகோதரர்கள் என்னை விட்டு ஒதுங்கிச் செல்வதை கண்டேன். நான் என்ன எழுதுகிறேன், என்ன உபதேசிக்கிறேன், போதிக்கிறேன் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ளாமல் என்னை விரோதிக்கிறார்கள். அதற்கு நான் என்ன செய்ய முடியும்?

28. பாருங்கள் இந்த சகோதரர் ஆதியிலே தேவன் மிருகங்களை ஜாதி ஜாதியாக படைத்தார் என்பதை ஏற்றுக்கொண்டார். அது யானை, குரங்கு, முயல் இது தான் ஜாதி என்று கூறுகிறார். ஆனால் இந்த ஜாதியில் பல இரகங்கள் உண்டு, பல வகைகள் உண்டு. பாருங்கள், குரங்குகளில் அதன் உடல் அமைப்புகளில் சில வித்தியாசங்களை கொண்டு பல இனங்கள் உண்டு. முயல், அதன் உடல் அமைப்புகளில் வித்தியாசங்களை கொண்டு பல வகைகள் உண்டு. இதை அவர் மறந்து விட்டார். ரோஜாவில் பல கலர்கள் உண்டு. அதாவது ரகங்கள் உண்டு. முருங்கைக்காய், இதில் பல வகைகள் உண்டு என்பதை அவர் முற்றிலுமாக சிந்தித்து பார்க்கவில்லை. பாருங்கள் ஆப்பிள் பழத்தில் கூட பல வகைகள், இரகங்கள் உண்டு. அந்தந்த ரகம், இனம், வகை அதனதன் இனத்தையே பிறப்பிக்கவேண்டும். சிகப்பு ரோஜா, சிகப்பு ரோஜாவையே பிறப்பிக்கவேண்டும். ஒரு வகை நீள ரகமான முருங்கைக்காய் தன் இனத்தையே பிறப்பிக்க வேண்டும். ஆப்பிள், மாம்பழம் அதனதன் இனத்தையே பிறப்பிக்க வேண்டும். ஆக ஒரு இனத்தில் பல ரகங்கள், வகைகள் உண்டு. அந்தந்த ரகம், வகை அதனதன் இனத்தையே பிறப்பிக்கவேண்டும். சிகப்பு ரோஜாவுடன் மஞ்சள் நிற ரோஜாவை கலப்பு செய்யக் கூடாது. அவ்வாறே குரங்குகளில் பல ரகங்கள் உண்டு. ஒரு ரகத்தை மற்றொரு ரகத்தோடு இனச்சேர்க்கையில் இணைக்கக்கூடாது. அதாவது இனப் பெருக்கத்தில் ஒரு ரகத்தை மற்றொரு ரகத்தோடு இணைக்கக்கூடாது. அதுஅது தங்கள் ரகத்தையே பிறப்பிக்க வேண்டும். மனிதனும் மிருக இனத்தை சேர்ந்தவன் தான். மிருக சாயலில் தான் அவன் உருவாக்கப்பட்டான். முதலில் ஆதாம் தேவசாயலில் சிஷ்டிக்கப்பட்டான். பின் மிருக சாயலில் உருவாக்கப்பட்ட அவனில் பல இனங்கள் உண்டு. ஆனால் இது தேவ சாயலில் சிஷ்டிக்கப்பட்ட மனிதனில் அல்ல. இதை நீங்கள் மறுக்க முடியாது. வித்தியாசமான, ஆனால் சற்று மாறுபட்ட உடல் அமைப்புகளில் மனித இனங்கள் பல உண்டு. ஒரு நீக்ரோக்கும், ஒரு இந்தியனுக்கும் உடல் அமைப்புகளில் வித்தியாசம் உண்டு. ஒரு இந்தியனுக்கும் ஒரு சீன தேசத்தானுக்கும் உடல் அமைப்புகளில் வித்தியாசம் உண்டு. இந்தியாவில் விசேஷமாக தமிழ் நாட்டில் ஒரு பிராமிணர் குலத்தினனுக்கும் ஒரு பறையர் குலத்தினனுக்கும் உள்ள வித்தியாசங்களை நீங்கள் காண முடியும். இதில் மிக முக்கியமானது கலர்.

29. இப்பொழுது வேதவாக்கியங்களின் அடிப்படையில் சில காரியங்களை தியானிப்போம். மச்சங்களை எடுத்துக்கொள்ளுங்கள். அதில் பல ஜாதிகள் உண்டு. எசே.47:10. Fish shall be according to their kind. வண்டுகள், அதில் பல ஜாதிகள் உண்டு யாத்.8:24. பறவைகளில் ஜாதிஜாதியான ரகங்கள் உண்டு ஆதி. 6:20. மிருகங்களில் ஜாதிஜாதியான வகைகள் உண்டு. ஆதி. 6:20. ஊரும் பிராணிகளில் ஜாதி ஜாதியான வகைகள் உண்டு. ஆதி. 6:20. மிருகம், பறவை, ஊரும் பிராணி அனைத்திலும் வகைவகையானவைகள் உண்டு. ஆதி. 6:20. ஜாதி ஜாதியான காட்டு மிருகங்கள் ஆதி. 7:14. ஜாதி ஜாதியான நாட்டு மிருகங்கள் ஆதி. 7:14. புல், விதைகளை பிறப்பிக்கும் பூண்டுகள், தங்களில் தங்கள் விதைகளை உடைய கனிகள் தங்கள் தங்கள் ஜாதிகளின் படியே கொடுக்கும் கனி விருட்சங்கள். ஆதி. 1:11, 12. மகா மச்சங்கள், நீர்வாழும் ஜந்துக்கள், சிறகுள்ள பட்சிகள் யாவும் தங்கள் தங்கள் ஜாதிகளின் படியே சிஷ்டிக்கப்பட்டது. ஆதி. 1:21.

30. பிரியமானவர்களே நீங்கள் தேவனுடைய சிருஷ்டிப்பை பார்த்தால் காட்டு மிருகங்கள், நாட்டு மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள், மச்சங்கள், கனி தரும் மரங்கள், புல், பூண்டு அனைத்தும் தங்கள் தங்கள் ஜாதிகளின் படி சிருஷ்டிக்கப்பட்டது. அதாவது அனைத்து வகையிலும், அனைத்து இனத்திலும், அனைத்து ஜாதியிலும் பற்பல ரகங்கள் இருக்கின்றன. அது அது தன்தன் ரகத்தை பிறப்பிக்கின்றது. பாருங்கள் மாம்பழத்தில் பல ரகங்கள், தென்னை மரத்தில் பல ரகங்கள், முருங்கை மரத்தில் பல ரகங்கள், குரங்குகளில் பல ரகங்கள், குதிரைகளில் பல ரகங்கள், பால் கொடுக்கும் பசுக்களில் பல ரகங்கள், ரோஜா பூவில் பல ரகங்கள், வாழைப்பழத்தில் பல ரகங்கள், ஊரும் பாம்பில் பல ரகங்கள், பல்லியில் பல ரகங்கள். இவ்வாறாக அனைத்து இனத்திலும் பற்பல ரகங்கள் உண்டு.

31. இப்பொழுது மனுக்குலத்துக்கு வாருங்கள். அங்கு யூத ஜாதி. எரே. 34:8, கல்தேயர் என்னும் ஜாதி. ஆபகூக். 1:6. அம்மோன் ஜாதி. 2 நாளா 12:13. ராமின் வம்சத்தார். யோபு. 32:2. மனுக்குலத்தில் பல வம்சங்கள் உண்டு. அது குறித்து சங்கீதக்காரன், ஜனங்களின் வம்சங்களே என்று சங். 96:7 ல் கூறுகிறான். (kindreds of the people) பாருங்கள், ஜனங்களிலும் பல வம்சங்கள் உண்டு. சிலர் இந்த ஜாதி, இனப்பிரச்னை நமது தமிழ்நாட்டில் மட்டும் தான் உண்டு என்கிறார்கள். இதர மாநிலங்களிலும், தேசங்களிலும் கிடையாது என்கிறார்கள். இது ஒரு அண்டப் புழுகு ஆகும். எல்லா மாநிலங்களிலும், தேசங்களிலும் இந்த பிரிவு, இனப் பிரச்சினைகள் உண்டு. இந்த நிற, இனப்பாகுபாடுகள் எல்லா மாநிலங்களிலும், தேசங்களிலும் இருக்கத்தான் செய்கிறது. இந்தியாவில் மட்டும் தான் என்பது, அதிலும் தமிழ்நாட்டில் மட்டுமே என்பது சத்தியத்தை மறைக்கும் ஒரு செயல் ஆகும்.

32. நம்முடைய போதனை என்ன? அந்தந்த வம்சங்கள் அந்தந்த வம்சத்தை பிறப்பிக்க வேண்டும். கல்தேயர் கல்தேயரைப் பிறப்பிக்க வேண்டும். அம்மோன், அம்மோனியரை பிறப்பிக்க வேண்டும். நாடார் நாடார் வம்சத்தை பிறப்பிக்க வேண்டும். பறையர், பறையர் இனத்தை பிறப்பிக்க வேண்டும். பிராமிணர், பிராமிணர் இனத்தை பிறப்பிக்க வேண்டும் என்பதாகும். இதில் கலப்படம் வேண்டாம். ஒரு கல்தேயனையும், ஒரு யூதனையும் இனவிருத்தியில் பிணைக்க வேண்டாம். ஒரு நாடாரையும், ஒரு பிராமிணரையும் இனவிருத்தியில் பிணைக்கவேண்டாம் என்பதாகும். இந்த போதனை வேத வாக்கியங்களோடு இசைந்து, இணைந்து செல்வதை நீங்கள் காணலாம்.

33. இப்பொழுது பாருங்கள், ஆதியிலே தேவன் தம்முடைய சாயலாகவும், தமது ரூபத்தின் படியேயும் மனுஷனை சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார். ஆதி. 1:26, 27. தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்ட ஆவியின் மேனியை கொண்ட மனுஷனை, பின்பு தேவன் மிருகசாயலாக மண்ணிலே உருவாக்கினார். ஆதி. 2:7. ஆக தொடக்கத்தில் தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்ட மனுஷன் பின்பு மிருக சாயலாக உருவாக்கப்பட்டான். ஒன்று சிருஷ்டிப்பு. மற்றொன்று உருவாக்கப்படுதல். இவ்விரண்டிற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. சிருஷ்டிப்பு என்பது ஒன்றும் இல்லாத நிலையில் ஒன்றை உலகத்தில் படைத்தல், பிரவேசிக்கச் செய்தல். உண்டாக்குவது ஒன்றிலிருந்து ஒன்றை உருவாக்குவதாகும். ஆவிக்குரிய சாயலில், தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் அதாவது படைக்கப்பட்ட மனிதன் பின் மண்ணினால் மிருகசாயலில் உருவாக்கப்பட்டான். ஆதலால் தான் மிருகங்களோடு மனிதனும் சம்பந்தப்பட்டவன் ஆனான்.

34. தேவன் மனிதனை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார். ஆதி. 1:27. எவ்வாறு தேவனுடைய ஆவிக்குரிய சரீரத்திற்குள் அவருடைய மணவாட்டி அவருடன் அவருக்குள் இருந்தாளோ, அதே போன்று மனுஷனுடைய ஆவிக்குரிய சரீரத்திற்குள் அவனுடன் அவனுக்குள் அவனுடைய மணவாட்டி இருந்தாள். ஆதாமுடன் அவனுடைய மணவாட்டி ஏவாள் அவனுக்குள் அவனுடைய ஆவிக்குரிய சரீரத்திற்குள் இருந்தாள்.

35. இதன் பின்பு தேவன் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் வாயில் ஊத அவன் ஜீவ ஆத்துமாவானான். ஆதி. 2:7. ஆவிக்குரிய சரீரத்தில் இருந்த மனுஷன் மாம்ச சரிரத்தில் உருவாக்கப்பட்டான். அதாவது மனுஷன் தேவ சாயலாக ஆவிக்குரிய சரீரத்தில் சிருஷ்டிக்கப்பட்டு, பின்பு மிருக சாயலாக மாம்ச சரிரத்தில் உருவாக்கப்பட்டான்.

36. எவ்வாறு குரங்குகளில் அதன் உருவ அமைப்பில் சிற்சில வித்தியாசங்களுடன் பல ரகங்களில் காணப்படுகிறதோ, அவ்வாறு மிருக சாயலில் உருவாக்கப்பட்ட மனுஷனிலும் அவன் சரிரத்தில் சிற்சில மாற்றங்களுடன் பல ரகங்கள் காணப்படுகிறது. உதாரணமாக ஒரு அமெரிக்கனையும் ஒரு நேபாளியையும், ஒரு நீக்ரோவையும் ஒரு இந்தியனையும் பாருங்கள். அவர்களுடைய சரிர அமைப்புகளில் சிறு சிறு வித்தியாசங்கள் காணப்படுகிறது. இவ்வாறாக மனுக்குலமும் இயற்கைக்கு எல்லாவற்றிலும் ஒத்ததாகவே உள்ளது.

37. நீங்கள் ஆதி. ஆறாவது அதிகாரத்திற்கு வந்தால் அங்கு அந்நாட்களில் இராட்சதர் பூமியிலே இருந்தனர். இவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? இவர்களுடைய ஆதித் தகப்பன், தாய் யார்? ஆதாம் ஏவாள் தானே! ஆதாம் ஏவாளில் இருந்துதானே மனுக்குலம் உருவாகியது, பிறந்தது. அப்படியானால் அவர்களிடமிருந்துதானே இந்த வித்தியாசமான இராட்சதர் தோன்றி அவர்கள் ஒரு ஜாதி ஆனார்கள். ஆதி 6:4. இந்த இராட்சத ஜாதி யார்? இவர்கள் காயீன் புத்திரர் தானே. சாத்தான் ஏவாள் உறவில் பிறந்த காயீன் புத்திரர் தானே.

38. தேவன் ஜலத்தினால் பூமியை அழிக்கும் வரை ஜனங்கள் ஒரே இனமாகத்தான் இருந்தனர். ஆனால் ஜலத்தினால் தேவன் பூமியை அழித்தபின்பு, பாபேல் கோபுர வீழ்ச்சிக்கு பின்பு மனிதர்கள் தங்கள் நிறங்களில் பாகுபாடுடன் காணப்பட்டனர். அவர்கள் சிதறடிக்கப்பட்டதால், நிற பாகுபாடு அவர்கள் வாழ்ந்து வந்த சீதோஷன நிலைக்கு ஏற்றவாறு அமைந்தது. ஆனால் ஆதாம் ஏவாள் தான் தகப்பனும் தாயுமானவர்கள். அவர்கள் மூலமாகத்தான் மனுக்குலம் பூமியில் பலுகி பெருகியது. Cause there was no coloured or white, or any other different, it's just one race of people un to the flood. Then after the flood and the tower of Babel, when they began to scatter out, that's when they taken their colours and soforth. They are all came from the same tree. That's exactly right. Adam and Eve was the father and mother, earthly, of every living creature of human beings that's, ever been on the earth. That's right. Black, white, Pale, Brown, Yellow, what ever colour you might be, that's absolutely the place that you live in, and the way that. Hebrew, Q and A, part IV, Page 467, Para 602. திருமணம் குடும்ப வழி தொடர்ந்து செல்ல, விருத்தியடைய நியமிக்கப்பட்ட ஒரு ஏற்பாடு. விவாகப் பிரமாணம் குறித்து நீங்கள் லேவி. 10, 20, 27 அதிகாரங்களில் தியானிக்கலாம்.

**39. இந்நாட்களில் எல்லாமே கலப்புள்ளதாகிவிட்டது. கலப்பு செய்தல், தேவன் படைத்ததை, தேவனுடைய நியமத்தை, தேவனுடைய திட்டத்தை சீர்குலைத்தல் ஆகும்.**

40. இந்த கலப்பைக் குறித்த விஷயத்தில், ஏவாள் தான் கலப்பிற்குத் தாய். அவள் மனிதகுலத்தை கலப்பு செய்தாள். அவள் சர்ப்பத்துடன் உடலுறவு கொண்ட போது, அப்பொழுது சர்ப்பம் ஒரு ஊரும் பிராணியாக இருக்க வில்லை. அந்த சர்ப்பம் ஒரு காட்டு ஜீவனாக இருந்தது. ஒரு மனித உருவமைப்புடையதாய் இருந்தது. ஆனால் மிருகத்தின் இரத்தம் மனிதர்கள் இரத்தத்துடன் கலக்க முடியாது. ஆனால் அந்த வர்க்கம் மானிட வர்க்கத்திற்கு மிகவும் நெருக்கமாய் இருந்த காரணத்தால் அவைகளின் இரத்தம் ஒன்றோடு ஒன்று கலக்க

முடிந்தது. சாத்தான் இதை அறிந்திருந்தான். சர்ப்பத்திற்கு இராட்சதனை போன்ற ஒரு உருவமைப்பு இருந்தது. (**கலப்பு மார்க்கம்**, பக்கம் 24, பத்தி 2, 3 தியானியுங்கள்)

41. இவ்வுலகில் எத்தனை சந்ததியார் உள்ளனர்? - மூன்று. சேம், காம், யாப்பேத் சந்ததியார்கள். நாம் எல்லோரும் நோவாவில் இருந்து தோன்றினவர்கள். உலகில் இருந்த மனுஷர் அக்காலத்தில் அழிக்கப்பட்டனர். மூன்று சந்ததியார் மாத்திரமே உள்ளனர். யூதன், புற ஜாதியார், சமாரியர் (இவர்கள் பாதி யூதர், பாதி புற ஜாதியும் ஆவர்) இந்த உலகில் மூன்று சந்ததியார் மாத்திரமே உள்ளனர். (**முரண்பாட்டின் விதை**, பக்கம் 41, பத்தி 114) ஆனால் பிற்காலங்களில் ஆபிரகாமின் சந்ததி, ஈசாக்கின் சந்ததி, யாக்கோபின் சந்ததி, தாவீதின் சந்ததி, ஆரோனின் சந்ததி எனப் பல சந்ததிகள் தோன்றினதையும் நாம் வேதத்தில் காண்கிறோம். இன்று போல் அந்நாட்களிலும் வீடு (House), வம்சம் (Family), இனம் (Kindred), குலம் (People), கோத்திரம் (Tribe) இருந்ததையும் நாம் காண்கிறோம். புறஜாதிகள் விக்கிரகாராதணைகாரர்கள். பிற்காலங்களில் இவர்களில் பல ஜாதி மக்கள் தோன்றினர்.

42. பூமியின் மீது மூன்று ஜாதியார் மாத்திரமே இருந்தனர். நீங்கள் வேதத்தை விசுவாசிப்பீர்களானால் சேம், காம், யாப்பேத் என்பவர்கள் மூலமாகவே மக்கள் பெருகினர். இவர்கள் தான் நோவாவின் மூன்று குமாரர்கள். நாம் எல்லோரும் இவர்களில் இருந்துதான் உண்டாகியிருக்கிறோம். அது சரிதான். இது நம் எல்லோரையும் ஆதாமிலிருந்து தோன்றினவர்களாக காண்பித்து, நம் எல்லோரையும் சகோதரர்களாக்குகிறது. ஒரே இரத்தத்தினால் தேவன் எல்லா ஜாதியினரையும் சிருஷ்டித்தார் என வேதம் கூறுகிறது. இரத்தத்தின் வழியாக நாம் எல்லோரும் சகோதரர்களாயிருக்கிறோம். ஒரு கறுப்பு மனிதன் தன் இரத்தத்தை ஒரு வெள்ளை மனிதனுக்குள் செலுத்த, கொடுக்க கூடும். அல்லது ஒரு வெள்ளை மனிதன் இரத்தத்தை ஒரு கறுப்பு மனிதனுக்குள் செலுத்த முடியும். ஒரு வெள்ளைக்காரன் தன் இரத்தத்தை ஒரு ஜாப்பானியனுக்கோ, மஞ்சள் நிறமுள்ளவனுக்கோ, ஒரு இந்தியனுக்கோ, சிகப்பு இந்தியனுக்கோ அல்லது வேறு யாருக்கும் செலுத்த, கொடுக்க முடியும். ஏனென்றால் நாம் எல்லோரும் ஒரே இரத்தத்தில் இருந்து வந்தவர்கள். நாம் எந்த இடத்தில் ஜீவிக்கிறமோ அதற்கேற்ப நம்முடைய நிறம் மாறுகிறது. ஆனால் நாம் உலகத்திலிருந்து வெளியே வரும்போது தான் பிரிக்கப்படுகிறோம். (**யார் இந்த மெல்கிசேதேக்கு?**, பக்கம் 41, பத்தி 144)

43. கலப்பு செய்தல், கலப்பு செய்தல் ஓ! எவ்வளவு பயங்கரமானது கலப்பு செய்தல் என்பது. இப்பொழுது இவர்கள் ஜனங்களை கலப்பு செய்கிறார்கள். ஆனால் ஆதி நாட்களில் இன ஜனத்துக்குள் தான் திருமணம் செய்வது நடைமுறையில் காணப்பட்டது. ஆதி. 24 அதி. ஆதி. 28:2, ஆதி. 29:19.

**44. ஜனங்கள் இப்பொழுது அவர்கள் இருக்கும் விதமாக தேவன் அவர்களை படைத்த விதமாக இருக்கவிட்டுவிட்டால் நலமாய் இருக்கும். பழுப்பு நிறத்தான் பழுப்பு நிறத்தினரையே விவாகம் செய்துகொள்ளட்டும். வெள்ளையர்கள் வெள்ளையர்களையே விவாகம் செய்துகொள்ளட்டும். கறுப்பு நிறத்தினர், மஞ்சள் நிறத்தினர், இன்னும் மற்றவர்கள் தேவன் அவர்களை படைத்த வண்ணமாகவே இருக்கட்டும். வயலட் பூவை தேவன் வெள்ளை நிறத்தில் உண்டாக்கியிருந்தால் அது வெள்ளை நிறமாகவே இருக்கட்டும். அது நீலம், கறுப்பு, பழுப்பு எந்த நிறமாய் இருந்தாலும் அந்த பூவை அப்படியே விட்டுவிடுங்கள். சோளப் பயிரை ஒரு குறிபிட்ட விதத்தில் பயிரிட்டிருந்தால் அது மஞ்சள் நிற சோளமாய் இருந்தால் அதை வெள்ளை நிற சோளத்துடன் கலக்க வேண்டாம். (கலப்பு மார்க்கம், பக்கம் 34, பத்திகள் 1, 5. நாள் 13-11-1960) ஆனால் வேசித்தன ஆவி அவர்கள் உள்ளத்தில் இருப்பதால் அவர்கள் கலப்படம் செய்து நெறித்தவறி நடக்கிறார்கள். அந்நிய பிள்ளைகளை பெருகிறார்கள். அது என் தகப்பன் யாரோ? என் தாய் யாரோ? என்கிறது. அது என் தகப்பன் தேவர், என் தாய் பிராமணத்தி என்கிறது. அது என் தகப்பன் நீக்ரோ, என் தாய் வெள்ளைச்சி என்கிறது. இது தான் கலப்படத்தின் நிலை. என்ன ஒரு வெட்கக்கேடு! வெளியே தலைக்காட்ட முடியவில்லை. ஆம் அவர்கள் ஜனங்களையும் கலப்படம் செய்கிறார்கள்.**

45. பிரியமானவர்களே காலேப் யோசுவா எழுதுவது, உபதேசிப்பது, பிரசங்கம் செய்வது என்னவென்றால் நீங்கள் எந்த நிலையில் இருக்கிறீர்களோ, அந்த நிலையில் நிலைத்து நில்லுங்கள். அதிலே பெண் கொள்ளுங்கள், அதிலே பெண் கொடுங்கள். அதில் கலப்படம் எதுவும் வேண்டாம். உங்களுடைய சமுதாயப் பிரிவு எதுவோ, உங்களுடைய இனம் எதுவோ, உங்களுடைய குலம் எதுவோ, உங்களுடைய கோத்திரம் எதுவோ அதிலே நிலைத்து நில்லுங்கள். அதில் கலப்படம் எதுவும் வேண்டாம். ஏனென்றால் உங்கள் சமுதாயப் பிரிவுகள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட, வித்தியாசமான பாரம்பரியங்களை, வழிவழியான, மரபான சமுக சம்பந்தமான ஒரு சமுதாயமாக இருக்கிறது. அது பிரத்தியேகமான தொழிலை கொண்ட சமுக சம்பந்தமான வகுப்பாக இருக்கிறது. இந்தியாவில் மொத்தம் நாலாயிரத்து அறுநூறு ஜாதிகள் இருக்கின்றன என்றும் மொத்தம் ஆயிரத்தி அறுநூறு மொழிகள் உள்ளன என்றும் எனது கையேட்டில் ஒரு குறிப்பு உள்ளது. இதை எப்பொழுது எதிலிருந்து எடுத்தேன் என்ற குறிப்பு எதுவும் காணப்படவில்லை. பொதுவாக ஒன்றை மற்றொன்றுடன் ஏன் கலப்படம் செய்ய வேண்டும்? அவ்வாறு கலப்பு செய்வது தேவையற்ற ஒன்றுதானே! ஆதலால் ஒன்றை மற்றொன்றுடன் கலப்பு செய்ய நினைக்காதீர்கள்.

46. ஏன் ஒரு நாடாரையும், ஒரு பிராமிணரையும் இன உற்பத்தியில் கலப்படம் செய்ய நினைக்கிறீர்கள்? ஏன் தேவன் அவர்களை எந்த குலத்தில், இனத்தில், கோத்திரத்தில் பிறக்கச்செய்தாரோ அந்த சமுதாயப் பிரிவிலே அவர்களை வாழ விட்டுவிட கூடாது. ஏன் மனுஷர்களை கலப்படம் செய்ய நினைக்கிறீர்கள்? உங்கள் ஆவி ஏன் கலப்படத்தை நாடுகிறது? உங்கள் ஆத்மா ஏன் கலப்படத்தை ஆதரிக்கிறது? இன்றுள்ள உலகம் கலப்படம் செய்வதில் சிறந்ததாய் விளங்கி, விலங்குகள் (Animals), பயிர்கள் (Corns), கோதுமை (Wheat) முதலானவைகளை கலப்படமாக்கி, வீரிய உற்பத்தியை உண்டாக்குகிறது. ஆனால் அது நலமானதல்ல. அவ்வாறாகவே மனுக்குலத்தையும் கலப்படமாக்குவது நலமானதல்ல.

47. அமெரிக்காவில் நிற பாகுபாடு உண்டு. அதனால் தீர்க்கதரிசி நிறத்தை பற்றியே பேசுகிறார். நமது மத்தியில் ஜாதி பாகுபாடு உண்டு. ஒவ்வொரு இனமும், குலமும், கோத்திரமும் தங்கள் தங்கள் கலாச்சாரத்தையும், பண்புகளையும் உடையதாக காணப்படுகின்றன. அவர்களை அப்படியே விட்டுவிடுவோம். கலப்பினமாக்க வேண்டாம். பாருங்கள் ஒரு பிராமிணர் சாப்பிடும் சாப்பாட்டைத்தான் மற்றொருவர் சாப்பிடுகிறார். அவர் குடிக்கும் தண்ணீரைத்தான் மற்றவர் குடிக்கின்றனர். அவர் குடியிருக்கும் ஊரில்தான் இவரும் குடியிருக்கிறார். ஆனாலும் பிராமிணர் குலத்தில் அனைத்து குழந்தைகளும் வெள்ளை நிறத்தில் பிறக்கிறது. ஆனால் இவர் வீட்டில் அனைத்து குழந்தைகளும் கறுப்பு நிறத்தில் பிறக்கிறது. ஆதலால் பிரியமானவர்களே ஜனங்களை

கலப்பினமாக்காதீர்கள். அது கொடுமை. அது சாத்தானின் சூது. அது பிசாசின் வஞ்சகம். அவன் கண்ணியில் விழாதீர்கள்.

**48. பிரியமானவர்களே நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலம் எங்கும் எதிலிலும் கலப்படத்தை கொண்டதாகவே இருக்கிறது. மனிதனில் கலப்படம், மிருகத்தில் கலப்படம், தாவரங்களில் கலப்படம், பழம் வகைகளில் கலப்படம், காய்கறிகளில் கலப்படம், தானியங்களில் கலப்படம். சபைகளை பார்த்தால் அங்கு உபதேசங்களில் கலப்படம். போதனைகளில் கலப்படம், குடும்பங்களில் கலப்படம். இவர்கள் மனுஷர்களை கலப்பினம் ஆக்குகிறார்கள். நாம் வாழும் காலம் ஒரு கலப்பின மார்க்க காலமாக இருக்கிறது. This is the age of hybreedings.**

49. தேவனுடைய நீதியானது மிருகமோ, தாவரமோ, மச்சங்களோ அல்லது எந்தவிதமான ஜீவராசியானாலும் சரி, அது பூமியின் மீது தங்கள் தங்கள் விதையை உடைய கனிகளை தங்கள் தங்கள் ஜாதியின்படியே பிறப்பிக்கவேண்டும். ஆதி. 1:11-25. உதாரணமாக மரங்களில், மாமரத்தை எடுத்துக்கொண்டால் அதில் பல ரகங்கள் உண்டு. பூக்களில் ரோஜா பூவை எடுத்துக்கொண்டால் அதில் பல நிறங்கள் உண்டு. தேவ நீதியின் படி அந்தந்த ஜாதி, அந்தந்த இனத்தையே பிறப்பிக்க வேண்டும். மல்கோவா மாம்பழம் மல்கோவா மாம்பழத்தையே பிறப்பிக்க வேண்டும். அத்துடன் கிளி மூக்கு மாம்பழம் ரகத்தை இணைத்து மற்றொரு மூன்றாவது ரக மாம்பழத்தை உற்பத்தி செய்யக் கூடாது. அது போன்று சிவப்பு நிற ரோஜாவுடன் மஞ்சள் நிற ரோஜாவை இணைத்து மற்றொரு மூன்றாவது நிற ரோஜா பூவை பிறப்பிக்கக் கூடாது. அதுஅது தன்தன் ரகத்தையே, கலரையே பிறப்பிக்க வேண்டும். ஒரு ரகத்தை மற்றொரு ரகத்துடன் இணைத்து மூன்றாவது ரகத்தை பிறப்பிப்பது தேவ நீதி அல்ல. தேவநியமமும் அல்ல.

50. இவ்வாறாக மானிட வர்க்கத்திலும் பல வித இனம், குலம், கோத்திரம் உண்டு. அதுஅது தன்தன் இனம், குலம், கோத்திரத்தையே பிறப்பிக்க வேண்டும். ஒரு இனம், குலம், கோத்திரத்தை மற்றொரு இனம், குலம், கோத்திரத்தோடு இணைத்து மூன்றாவது இனம், குலம், கோத்திரத்தை உருவாக்க வேண்டாம். அது தேவ நீதியும் கிடையாது.

51. நான் மேற்கண்ட எனது விலாசத்தில் 1-12-2005 முதல் வசித்து வருகிறேன். எனது வீட்டில் ஒரு வகை நாய் உண்டு. அது ஆண். ஒரு நாள் அது வெளியே ஓடி சென்றது. தெருவில் பொதுவாக நமது மத்தியில் காணப்படும் சாதாரணமான இனத்தை சேர்ந்த ஒரு பெண் நாய் நின்றுகொண்டிருந்தது. எங்கள் வீட்டு நாய், அந்த தெரு நாயின் பின்பக்கம் சென்று, அந்த பெண் நாயின் பின் பாகத்தை முகர்ந்து, முகர்ந்து பார்த்தது. பின் திரும்பி வந்துவிட்டது. காரணம் என்ன? இந்த ஆண் நாயின் இனத்தை சார்ந்தது அல்ல அந்த பெண் நாய். ஆதலால் அதனோடு இனச்சேர்க்கை கொள்ள இதற்கு முடியவில்லை. ஆதலால் திரும்பி வந்துவிட்டது. மனுக்குலமும் மிருக இனத்தை சேர்ந்தது என்பதை நீங்கள் மறுக்கமுடியாது.

52. கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே, வாருங்கள், நாம் அவரவர் இனம், குலம், கோத்திரத்தை பற்றி பெருமைப்பட்டுக் கொள்வோம். நான் ஒரு பறையரானால், நான் ஒரு பறையர் குலத்தில் பிறந்து வளர்ந்ததை குறித்து பெருமைப்பட்டுக் கொள்ளவேண்டும். நான் தேவரானால், நான் ஒரு தேவர் குலத்தில் பிறந்து வளர்ந்ததை குறித்து பெருமைப்பட்டுக் கொள்ளவேண்டும். தேவன் நம்மை எந்த குலத்தில் பிறக்கவைத்து, வளரவைத்து நிலைத்துநிற்க முன்குறித்துள்ளாரோ அந்த குலத்தில் நிலைத்திருந்து அதில் பெருமைப்பட்டுக்கொள்வோம். ஆனால் ஒன்றை மட்டும் நாம் மறந்துவிடக் கூடாது. நாம் எந்த இனத்தில் சமுதாயத்தில் பிறந்து வளர்ந்தாலும் நாம் அனைவரும் ஒரே இரத்தத்தினால் உண்டானவர்கள். ஆதலால் நாம் அனைவரும் சகோதரர்கள். இதில் எந்த விதமான விரோதங்களுக்கு இடமே இல்லை. தாழ்வு, உயர்வு எண்ணங்களுக்கு வழியே இல்லை. ஆனால் நம் மத்தியில் ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கி நம்மை பிரிப்பவன் பிசாசு. பாருங்கள் கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசிக்கும் விசுவாசிகளை, ஸ்தாபன சபைகள் தங்கள் போதனைகளினால், அவர்களுக்குள் பிரிவினைகளை உண்டுபண்ணுகிறார்கள். நான் CSI, நீ TPM. அவன் அசெம்பிளி ஆப் காட் என்று கூறி மக்கள் மத்தியில் பிரிவினைகளை உண்டுபண்ணுகிறார்கள். மேலும் இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ளவர்கள் மத்தியில் நான் சென்னை சபையை சார்ந்தவன், நீ கல்வாரி சபையை சார்ந்தவன், அவன் மணவாட்டி கூடாரத்தை சேர்ந்தவன் என்று கூறி அவர்கள் மத்தியில் பிரிவினைகளை உண்டு பண்ணுகிறவர்கள். இவர்கள் யார்? பிசாசு. ஆதலால் பிரியமானவர்களே அப்படிப்பட்ட பிரிவினைகளுக்கு இடம் கொடுக்காதீர்கள். நம் மத்தியில் பிரிவினைகளை உண்டு பண்ணுகிறவன், விரோதத்தை உண்டு பண்ணுகிறவன் பிசாசேயன்றி மற்றபடி அல்ல. நாம் நமது சபையில் உள்ள சகோதர சகோதரிகளோடுதான் இராப்போஜனம் பண்ண வேண்டும். நம்முடைய இதர சபை விசுவாசிகளோடு இராப்போஜனத்தில் பங்கு கொள்ளக் கூடாது என்று உபதேசிக்கும் உங்கள் பாஸ்டர் ஒரு பிசாசே. அவன் சாத்தானின் செய்தியாளனே. நீங்கள் இக்காலத்துக்குரிய செய்தியிலுள்ள எந்த சபையை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, நீங்கள் அனைவரும் ஒன்று கூடி கர்த்தருடைய இராப்போஜன பந்தியை ஆசரிக்காலம். சில சமயங்களில் பற்பல சபையை சேர்ந்த சகோதரர்கள் ஒன்று கூடுவார்களானால் அவர்கள் ஒன்றாக சேர்ந்து கர்த்தருடைய இராப்போஜன பந்தியை ஆசரிக்கலாம்.

53. நாம் யாவரும் ஒன்று என்ற நம்பிக்கை வேண்டும். நாம் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டவர்கள். நாம் ஒரே சரீரம். நம்மிடத்தில், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே கர்த்தர். ஆதலால் நீங்கள் எந்த சபைக்கு சென்று கொண்டிருந்தாலும் என்னிடத்தில் ஒரு நாள் ஒன்றுக்கூடி சபைக்கடுத்த காரியங்கள் உபதேசங்களுக்கடுத்த காரியங்கள், ஆவிக்குரிய காரியங்களை பேசி, நமக்குள் பக்திவிருத்திக்கேதுவான விஷயங்களை பேசி, ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேறி செல்வோம் வாருங்கள் என அழைத்தேன். ஆனால் யாருக்கும் அதில் ஒரு மனம் இல்லை. ஏன்? அவர்கள் அவரவர் சபைகளையே சார்ந்திருக்க விரும்புகிறார்கள். அது மரணம் என்பதை அவர்கள் அறியாதிருக்கிறார்கள். உங்கள் பாஸ்டர்கள் உங்களை மரணத்திற்குத்தான் வழிநடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று அவர்கள் மேல் குற்றம் சாட்டுகிறேன்.

54. இஸ்ரவேல் புத்திரர்கள் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களின் சுதந்தரத்தை அனுபவிக்கும்படி, இஸ்ரவேல் புத்திரருடைய ஒரு கோத்திரத்திலே சுதந்திரம் அடைந்திருக்கிற எந்த குமாரத்தியும் தன் பிதாவின் கோத்திர வம்சத்தில் ஒருவனுக்கு மனைவியாக வேண்டும். சுதந்தரமானது ஒரு கோத்திரத்தை விட்டு மற்றொரு கோத்திரத்தை சேரக்கூடாது என்று கர்த்தர் கட்டளையிட்டார். எண். 36:6-9 என் ஜனத்தில் ஒருவரும் தங்கள் சொந்தமானதுக்கு புறம்பாக்கப்பட்டு, சிதறடிக்கப்படாதபடிக்கு அவன் தன் சொந்தத்திலே தன் குமாரருக்கு சுதந்தரம் கொடுக்கக்கடவன் எசே. 46:18 அந்தப்படி சுதந்தரம் ஒரு கோத்தரத்தை விட்டு மற்றொரு

கோத்தரத்திற்கு செல்லக்கூடாது என்பதற்காக கலப்புத்திருமணம் தடைசெய்யப்பட்டது. அவ்வாறாகத்தான் நம் மத்தியில் ஒரு இன குல கோத்திரத்தின் சுதந்தரம், மற்றொரு இன குல கோத்திரத்தை சேரக்கூடாது.

55. ஆதி நாட்களில் பொதுவாக தன் இன ஜன பந்துக்கள் மத்தியில் தான் விவாகம் செய்தார்கள். (Consanquineous Marriage) நீங்கள் இது குறித்து ஆதி. 24, 28, 34 அதிகாரங்களிலும், மற்றும் எண். 12:1, நியாயாதிபதி 14:3 வசனங்களிலும் தியானிக்கலாம். பாருங்கள் ஏசா ஏத்திய குமாரத்தியை விவாகம் பண்ணின போது அது ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் மனநோவாக இருந்தது. ஆதி. 26:34, 35, 27:46. ஆனாலும் யோசேப்பு ஆதி. 41:45, தாவீது 2 சாமு. 3:3, சாலொமோன் 1 இரா 3:1, 11:1 கலப்புத்திருமணமாகவே இருந்தது. அது இயேசு கிறிஸ்துவின் புறஜாதி மணவாட்டிக்கு எடுத்துக்காட்டாக இருந்தது. பொதுவாக கலப்புத்திருமணம் ஒன்று என்றால் முறையான திருமணம் ஐந்தாக அந்நாட்களில் இருந்தது என 1909 ஆம் ஆண்டு வேதஅகராதி ஒன்றில் நான் திருமணம் குறித்து தியானிக்கும் போது தியானித்தேன். அன்று கலப்புத் திருமணம் எஸ்றாவுக்கும், நெகேமியாவுக்கும் அருவருப்பாக இருந்தது. எஸ்றா 9, 10 அதி. நெகே. 10:30, 13:23. இவர்களை போன்றுதான் இன்றைய காலேப் யோசுவாவுக்கும் கலப்பு திருமணம் அருவருப்பாக இருக்கிறது. ஆனாலும் அது உங்கள் சுயாதீனம், உங்கள் கருத்துக்கு நீங்களே பொறுப்பு.

56. நாம் விவாகத்தை பற்றிய பிரமாணத்தை லேவி. 18 வது அதி. 20:19-21, மற்றும் உபா. 27:20-23 வசனங்களில் தியானிக்கலாம். ஆபிரகாம் தன் உடன் பிறந்த சகோதரியை அல்ல. மாறாக தன் தகப்பனின் இன்னொரு மனைவியின் மகளை விவாகம் செய்தான். ஆதி. 20:12. அம்ராம் தன் அத்தையாகிய யோகெபேத்தை விவாகம் பண்ணினான். அவள் அவனுக்கு ஆரோனையும், மோசேயையும் பெற்றாள். யாத். 6:20. இஸ்ரவேல் தன் தன் கோத்திரத்திலே பெண் கொள்ளவேண்டும். எண். 36:6 ஆசாரியன் வேசியை, கற்புக்குலைந்தவளை, புருஷனாலே தள்ளிவிடப்பட்ட ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணக் கூடாது. ஒரு கன்னிகையே விவாகம் பண்ண வேண்டும். வேவி. 21:7,14. ஆபிரகாம், தன் மகன் ஈசாக்குக்கு அந்நிய ஜாதியாரிடத்தில் பெண் கொள்ள தடைவிதித்தான். தன் ஜனத்தில் பெண் கொள்ள கட்டளையிட்டான். ஆதி. 24:4. தாவீது, சாலொமோன் அந்நிய பெண்களை விவாகம் பண்ணினார்கள். 2 சாமு. 3:3, 1 இரா. 3:1. எபிரேய ஸ்திரீகள் அந்நிய ஜாதி புருஷரை விவாகம் செய்ததை காண்கிறோம். தீமோத்தேயுவின் தாய் எபிரேய ஸ்திரீ. தகப்பன் கிரேக்கன். அப். 16:1. இஸ்ரவேலர் கானானியரோடு விவாகம் செய்ய தடைசெய்யப்பட்டனர். யாத். 34:16. ஆனால் மோவாப், எகிப்தியரோடு விவாகம் செய்தனர். ஆதி. 41:45, உபா. 23:7, ரூத். 1:14. ஆனாலும் எஸ்றா, நெகேமியா கலப்பு விவாகத்தை தடை செய்தனர். நானும் கலப்புத் திருமணம் கூடாது என்கிறேன்.

57. நான் வசித்து வந்த திருவைகுண்டத்தில் பல தரப்பட்ட ஜாதிகள் உண்டு. நாடார், தேவர், பறையர், பிள்ளை, பிராமிணர், கோனார் போன்ற பல ஜாதியினர் வசித்து வருகின்றனர். இவர்கள் யாவரும் ஒரே இடத்தில், ஒரே சீதோஷண நிலையில், ஒரே விதமான உணவுகளை உட்கொண்டு ஒரே தண்ணீரை குடித்து வளர்ந்தாலும், அவர்களுடைய சரீரகட்டமைப்பு அவர்களுடைய நிறம், அவர்களுடைய நாகரீகம், பண்பாடு, கலாச்சாரம் இவைகளைகொண்டு, இவர் இந்த ஜாதியை சேர்ந்தவர் என்று அடையாளம் காட்ட முடியும். ஒரு பிராமிணரையும் ஒரு பறையரையும் ஒன்றாக நிறுத்தினால் இதில் யார் பிராமிணர், யார் பறையர் என அடையாளம் காட்ட முடியும். ஆனாலும் சில சமயங்களில் எதற்கும் விதிவிலக்குகள் உண்டு.

58. ஆக ஒருவனை அவனுடைய சிருஷ்டி கர்த்தர் எந்த குலத்தில், எந்த இனத்தில், எந்த கோத்திரத்தில் பிறப்பித்துள்ளாரோ அவ்விதமாகவே அவன் நிலைத்திருக்க வேண்டும். இனப்பெருக்கத்திற்கு ஒரு பறையரையும் ஒரு பிராமிணரையும் இணைக்க வேண்டாம். ஏன் அவ்வாறு அவர்கள் இணைக்க முயர்ச்சிக்கிறார்கள் எனத் தெரியவில்லை. என்னை பொறுத்த அளவில் பொருளாதார நிலையில் தாழ்த்தப்பட்ட ஒரு இனத்தில் உள்ள ஒரு நபர் பொருளாதார நிலையில் உயர்ந்த ஒரு இனத்தில் பெண் கொடுக்க, எடுக்க விரும்புகிறார். இது தான் காரியம். எல்லோரும் பொருளாதார வசதியில் இந்நாட்களில் கண்ணோக்கமாக இருக்கிறார்கள். நான் ஒரு சகோதரனை அறிவேன். அவருக்கு பல இடங்களில் அவரது சமுதாயத்தில் யாரும் பெண் கொடுக்க முன் வரவில்லை. ஆதலால் அவர் எந்த குலத்திலும் நாம் பெண் எடுக்கலாம், பெண் கொடுக்கலாம் அதில் தவறு இல்லை என கூறி கலப்புத்திருமணம் செய்தார். ஆனால் அவர் திருமணம் ஒரு வெற்றிகரமாக அமையவில்லை. அவர்கள் கலப்புத்திருமணத்தில் உள்நோக்கம் ஒன்று இருந்தது. இப்படியாகத்தான் தங்கள் சுய ஆதாயத்திற்காக, சுயநலனுக்காக பலர் கலப்புத்திருமணத்தை நாடுகிறார்கள். குறிப்பாக சொல்லப்போனால் பணம், படிப்பு, அழகு போன்ற உலக பிராகாரமான வசதி வாழ்க்கைக்காக அநேகர் கலப்புத்திருமணத்தை நாடுகிறார்கள்.

59. கலப்புத்திருமணத்தை ஆதரித்து வந்த ஒரு சகோதரர், ஒரு நாள் என்னிடம் வந்து நான் வேத வாக்கியங்களின் அடிப்படையில் இக்காலத்துக்குரிய செய்தியின் அடிப்படையில் கலப்புத்திருமணம் செய்யக் கூடாது என எழுதி, உபதேசித்து, போதித்து வருவதில் நியாயம் இருக்கிறது என்று கூறி தான் அதை உணர்ந்த ஒரு சம்பவத்தை சாட்சியாக கூறினார். அதாவது ஓர் இடத்திற்கு சென்று கொண்டிருந்த போது தன் கண்களினால் கண்ட ஒரு சம்பவத்தை கூறினார். அதாவது ஒரு இடத்தில் நாம் தெருக்களில் அடிக்கடி அங்காங்கு காணும் ஒரு கூட்டம் காகங்களை கண்டிருக்கிறார். பின் அதன் பக்கத்தில் ஒரு சில முற்றிலும் கறுப்பு நிறமான காகங்களை (நாம் அண்டை காகம் என்று அவைகளை அழைக்கிறோம்) கண்டிருக்கிறார். அதாவது அவைகள் மொத்தமாக காகங்கள் தான். ஆனாலும் அதில் இரு ரகங்கள் காணப்பட்டு, இரண்டு ரகங்களும் தங்கள் தங்கள் தனித் தன்மையை காட்டுகிறதாக நின்றுகொண்டிருந்தன என்றார். ஆம் பிரியமானவர்களே மனுஷர்கள் மத்தியிலும் இந்த பாகுபாடு உண்டு. அதை நீங்கள் மறுக்க முடியாது.

60. நான் திருவைகுண்டத்தில் இருந்தபோது என் வீட்டுக் காம்பவுண்டுக்குள் தென்னை மரம் இருந்தது. அதில் பல்லிகள் காணப்பட்டன. அதே நேரத்தில் என் வீட்டிலும் சுவர்களில் பல்லிகள் காணப்பட்டன. நான் இரண்டிற்கும் வித்தியாசத்தை கண்டேன். ஒன்று மற்றொன்றோடு கலப்பதில்லை. நாம் ஒன்றை மரப்பல்லி என்றும் மற்றொன்றை வீட்டு பல்லி என அழைப்போம். மரப்பல்லி உருவத்தில் கொஞ்சம் பெரியதாக இருக்கும். வீட்டு பல்லி உருவத்தில் சற்று சிறியதாக இருக்கும். ஆக பல்லி இனத்தில் பல ரகங்களை கண்டேன். ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்ததாகவே இருந்தது. ஒன்று மற்றொன்றோடு கலப்பதில்லை.

61. அவ்வாறாகவே எனது தெருவில் நான் வீட்டு நாய்களை கண்டிருக்கிறேன். ஒன்று பொதுவாக நாம் அனைத்து இடங்களிலும் காண்பது. மற்றொன்று தனிப் பிறவியாக இருந்தது. ஆனால் இந்த வீட்டு நாய்களும் அந்த தனிப் பிறவி நாய்களும் இனச்சேர்க்கையில் ஈடுபடுவதில்லை. அவைகள் தனித்தன்மை கொண்டதாகவே

இருக்கக் கண்டேன். நாய் இனத்திலும் பற்பல இனங்கள். அவைகள் தங்கள் இனப் பெருக்கத்தில் தனித் தன்மை வாய்ந்ததாகவே இருக்கிறது.

62. எனக்கு பிரியமானவர்களே நாம் யாவரும் ஒரே இரத்தத்தினால் சிருஷ்டிக்கப்பட்டவர்களாக இருந்தாலும் நம்மில் பல நிறங்கள் உண்டு, பல இனங்கள் உண்டு, பல பிரிவுகள் உண்டு, பல வகுப்புகள் உண்டு. ஆனால் ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்ததாகவே இருக்கிறது. அவைகளின் கலாச்சாரம், பண்பாடு, வழிநெறிமுறைகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாகவே உள்ளன. ஆதலால் எனக்கு பிரியமானவர்களே நம்மை தேவன் எந்த வகுப்பில், இனத்தில், கோத்திரத்தில் பிறப்பித்துள்ளாரோ, உருவாக்கியுள்ளாரோ அதில் நாம் நிலைத்திருந்து கிறிஸ்துவுக்கு சாட்சியான ஒரு வாழ்க்கை வாழ்வோம்.

63. சிலர் இந்த ஜாதி பாகுபாடு நமது நாட்டில் மட்டும், பிரத்தியேகமாக தமிழ்நாட்டில் மட்டுமே உண்டு என்கிறார்கள். அது அப்படி அல்ல. நான் **ஜாமக்காரன்** என்ற பத்திரிக்கையில் டிசம்பர் 2005 இதழை சமீபத்தில் வாசிக்க நேர்ந்தது. அதில் செய்திகள் பகுதியில் **உள்நாட்டுக் கலவரம்** என்ற தலைப்பு கொடுத்து கீழ்க்கண்டவாறு எழுதியிருப்பதை வாசித்தேன். பிரான்ஸ், ஸ்வீடன் போன்ற நாடுகளில் வேலையில்லா திண்டாட்டம், **நிறவெறி, இனப்போராட்டம்** காரணமாக தேசமே நெருப்பில் எரிவது போல் எங்கு பார்த்தாலும் வீடுகளும், கார்களும், பஸ்களும் தீவைத்து கொளுத்தப்பட்டு போர்க்களம் போல் காட்சியளித்தது என எழுதப்பட்டிருந்தது. பாருங்கள் நிறம், இனம், பாகுபாடுகள் உலகில் எங்கும் காணப்படுகின்ற ஒன்றேயன்றி அது தமிழ்நாட்டில் மட்டும் காணப்படும் ஒன்று ஆகாது.

64. ஆனாலும் கிறிஸ்துவுக்குள் நாடார் என்றும் இல்லை, தேவர் என்றும் இல்லை, பறையர் என்றும் இல்லை, யாதவர் என்றும் இல்லை, பிராமிணர் என்றும் இல்லை. நாம் அனைவரும் கிறிஸ்துவுக்குள் சகோதரர்களும் சகோதரிகளுமாக இருக்கிறோம். ஆனால் கொள்வனையும், கொடுப்பனையும் இப்பிரபஞ்சத்துக்குரியதால், நாம் இப்பிரபஞ்சத்தில் பலுகி பெருக தேவன் நம்மை எவ்வாறு உருவாக்கி இருக்கிறாரோ, அந்த நிலையில் நிலைத்திருப்போம். அதுவே தேவநீதி. ஆதலால் இனஅபிவிருத்திக்காக ஒரு பிராமிணரையும் ஒரு பறையரையும் இணைக்க வேண்டவே வேண்டாம்.

65. நீங்கள் கூறுவது படி கிறிஸ்துவுக்குள் நாடார் பறையர், பிராமாணர், யாதவர் என்று இனப்பாகுபாடுகள் கிடையது. நாம் அனைவரும் ஒரே குடும்பம். அது 100 சதவீதம் உண்மைதான். கிறிஸ்துவை தரித்துக்கொண்டவர்களுக்குள், கிறிஸ்துவின் சரீரத்தில் யூதன் என்றும் இல்லை, கிரேக்கன் என்றும் இல்லை. அதே போன்று கிறிஸ்துவுக்குள் நாடார் என்றும் இல்லை, பறையர், பிராமாணர், யாதவர் என்றும் இல்லை. அதே நேரத்தில் கிறிஸ்துவுக்குள் ஆண் என்றும் பெண் என்றும் இல்லை. கலா. 3:28 இதையும் நீங்கள் மறந்து விடக்கூடாது. இப்பொழுது கவனியுங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் மத்தியில் யூதன் இல்லையா? கிரேக்கன் இல்லையா? நாடாா, பறையர், பிராமாணர், யாதவர் இல்லையா? ஆண் இல்லையா? பெண் இல்லையா? கிறிஸ்துவுக்குள் ஆண் என்றும் பெண் என்றும் இல்லையென்றால் பின் கிறிஸ்துவுக்குள் அவர்கள் எப்படித் திருமணம் செய்துக்கொள்கிறார்கள்? அவர்கள் எப்படி பலுகி பெருகுகிறார்கள்? ஆண் பெண் இருந்தால் தானே பலுகி பெருக முடியும்? மற்றபடி அவர்கள் ஓரினச் சேர்க்கையில் வாழ்ந்து வருகிறார்களா? ஆதலால் எனக்கு அருமையானவர்களே கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையும், இப்பிரபஞ்சத்திற்குரிய பலுகி பெருகக் கூடிய இல்லற வாழ்க்கையையும் இணைத்து தவறுக்குள் ஆளாகாதீர்கள். இப்பிரபஞ்சத்தில் நாம் இனப்பெருக்கத்திற்காக ஒரு பிரத்தியேகமான வாழ்க்கை வாழ்கிறோம். ஆனால் கிறிஸ்துவுக்குள் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை வித்தியாசப்பட்டது. கிறிஸ்துவுக்குள் என் மனைவி எனக்கு சகோதரி. இப்பிரபஞ்சத்தில் அவள் எனது மனைவி. இவ்விரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா? நீங்கள் ஆவிக்குரியவர்களானால் மட்டுமே புரிந்து, அறிந்து கொள்ள முடியும்.

66. சென்னையை பொறுத்தளவில் நான் கடந்த இரண்டரை ஆண்டுகளாக சபைகளில் கண்டது ஜாதி துவேஷம் தான். இந்த ஜாதி துஷேத்தை நான் ஸ்தாபன சபைகளில் தான் கண்டிருக்கிறேன். ஆனால் இக்காலத்திற்குரிய செய்தியிலும் பிசாசு நுழைந்துள்ளதை நான் சென்னை வந்த பிறகே அறிய வந்தேன். ஆம் இங்கும் ஜாதி துவேஷம் தலைவிரித்தாடுகிறது. பொதுவாக சென்னையில் தெலுங்கு பேசும் மக்களைக் கொண்ட ஒரு பிரிவு, நாடார் இனத்தைக் கொண்ட ஒரு பிரிவு, நாங்கள் 85% என கணக்கெடுக்கப்பட்ட மக்களைக்கொண்டு ஒரு பிரிவு. நான் என் கண்களினால் இம்மூன்று பிரிவினரையும் காண்கிறேன். கிறிஸ்து இயேசுவுக்குள் எனக்கு பிரியமானவர்களே நீங்கள் இப்படிப்பட்ட பிரிவுகளை சேர்ந்தவர்களாயிருப்பீர்களானால் நீங்கள் உங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேற முடியவே முடியாது. இந்த ஜாதி கோஷ்டி மிகவும் ஆபத்தானது. இதில் முக்கியமான ஈடுபாடு கொண்டவர்கள் கோவை ராஜா, மற்றும் பாஸ்டர் ஜான் ஐசக்.

67. பாருங்கள் தெலுங்கு பாஸ்டர் என்ன சொல்கிறாரோ அதுவே தெலுங்கு விசுவாசிகளுக்கு தெய்வவாக்கு. நாடார் இனத்து பாஸ்டர் என்ன கூறுகிறாரோ அதைவிட்டு நாடார் இனத்து விசுவாசிகள் வலது இடது புறம் சாய்வதில்லை. அவ்வாறாகவே 85% பாஸ்டர் என்ன உபதேசிக்கிறாரோ, அது சரியோ அல்லது தவறோ அவர் போட்ட கோட்டை அந்த இன மக்கள் தாண்டுவது கிடையாது. இவ்வாறாக இக்காலத்துக்குறிய செய்தி சென்னையில் பாழடைந்துகொண்டு செல்வதைக் காண்கிறேன். இந்த ஜாதி, மொழி அடிப்படையில் இயங்கிவருகிற சபைகள் யாவும் பிசாசினுடையதே. இந்த கூட்டங்களை நம்பி மோசம் போகாதீர்கள். இது மிக்க கொடிதான வஞ்சிப்பின் காலம் என்பதை உங்களுக்கு திரும்ப திரும்ப நினைப்பூட்டுகிறேன். வெளியே ஜாதி இல்லையடி பாப்பா, ஆனால் உள்ளோ நாம் 85% மற்றவர்கள் 15% என்ற கணிப்பு. இப்படியாய் மாய்மாலம் பண்ணும் ஊழியக்காரர்களை நம்பி மோசம் போகாதீர்கள்.

68. பிரியமானவர்களே இப்பிரபஞ்சத்திற்குரிய வாழ்க்கையில் ஜாதி, குலம், கோத்திரம் நம் மத்தியில் உண்டு. நாம் இந்த வனாந்திர வாழ்க்கையில் இவைகளுடன் இணைந்தே செல்லவேண்டியதாய் உள்ளது. கிறிஸ்துவுக்குள் ஆண் என்றும் பெண் என்றும் இல்லை. ஆனால் இப்பிரபஞ்ச வாழ்க்கையில் ஆண் உண்டு, பெண் உண்டு. இதை நீங்கள் புரிந்துகொண்டால் நலமாய் இருக்கும். உங்களால் புரிந்துகொள்ள முடியாவிட்டால் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு புரிய வைக்கிறேன். நான் உங்களுக்கு புரிய வைக்கும்போது நிச்சயமாக கர்த்தருடைய ஆவி நம்மோடு இடைபடுவார்.

69. கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே, இப்பிரபஞ்ச வாழ்க்கை வேறு, கிறிஸ்துவுக்குள் நமது ஆவிக்குரிய வாழ்க்கை வேறு. இப்பிரபஞ்ச வாழ்க்கையில் யூதன் உண்டு, கிரேக்கன் உண்டு, நாடார் உண்டு, பறையர் உண்டு, ஆண் உண்டு, பெண் உண்டு. ஆனால் கிறிஸ்துவுக்குள் மேற்கூறிய அனைத்தும் இல்லை. நாம் அனைவரும் கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கிறோம், மணவாட்டிகளாக அல்ல. மணவாட்டியாக ஒருமையில் இருக்கிறோம்.

70. கிறிஸ்துவுக்குள் நானும் என் மனைவியும் சகோதர, சகோதரிகள். கிறிஸ்துவுக்குள் நானும் என் மகன்களும் சகோதரர்கள். கிறிஸ்துவுக்குள் நானும் எனது பெண் மக்களும் சகோதர சகோதரிகள். இப்பிரபஞ்ச வாழ்க்கையில் இனப்பெருக்கம் உண்டு. கிறிஸ்துவுக்குள்ளான வாழ்க்கையில் இனப்பெருக்கம் இல்லை. ஏனென்றால் நாம் அனைவருமாக கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கிறோம். அவர் நம்முடைய மணவாளன், நாம் அவருடைய மணவாட்டி.

71. இனப்பெருக்கத்திற்கான திருமணம் இப்பிரபஞ்சத்திற்குரியது. மத். 22:30, மாற். 12:25 இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பெண் கொண்டும் பெண் கொடுத்தும் வருகிறார்கள். மறுமையையும் மரித்தோரிலிருந்து எழுந்திருத்தலையும் அடைய பாத்திரமாக எண்ணப்படுகிறவர்களோ பெண் கொள்வதுமில்லை, பெண் கொடுப்பதுமில்லை. அவர்கள் இனி மரிக்கமாட்டார்கள், அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளாய் இருப்பதால் தேவதூதர்களுக்கு ஒப்பானவர்களாய், தேவனுக்கு பிள்ளைகளுமாய் இருக்கிறார்கள். லூக். 20:34-36 இந்த வேத பகுதிகளில் இருந்து திருமணம் முற்றிலுமாக இம்மைக்குரியது என காண்கிறோம். மறுமைக்குரிய காரியங்களை இதில் இணைக்கக்கூடாது. இங்குதான் பெண் கொள்வதும், கொடுப்பதும் உண்டு. ஆனால் மறுமையில் அது இல்லை. அங்கு நாம் தேவதூதர்களை போல் இருப்போம்.

72. **கலப்புக் குறித்து தேவனுடைய வார்த்தை என்ன கூறுகிறது?** எப்பிராயீம் அந்நிய ஜாதியோடு கலந்திருக்கிறான். ஓசி. 7:8 உன் திராட்சை ரசம் தண்ணீர் கலப்பானது. ஏசா. 1:22 உன் மிருக ஜீவன்களை வேறு ஜாதியோடே பொலிய விடாயாக. உன் வயலிலே வெவ்வேறு வகையான விதைகளை கலந்து விதையாக. சணல் மற்றும் கம்பளி நூல் கலந்த வஸ்திரத்தை உடுத்தாதே. லேவி. 19:19 நம் ஊரில் நெல் பயிரில் எத்தனையோ ரகங்கள் உண்டு. ஒரு ரகத்தை மற்றொரு ரகத்தோடு கலக்க மாட்டார்கள். கலப்பு என்பது சரியானது ஒன்றை தாறுமாறாக்குவது.

73. என் தோல் வெள்ளை நிறமாயும், அவர்களுடைய தோல் கறுப்பு நிறமாயும் இருப்பதால் எனக்கு எந்த வேற்றுமையும் கிடையாது. அவர்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவர்கள் என் சகோதரர்கள்.

74. இப்பொழுது கலப்பு விவாகத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. வெள்ளையன் ஒருவன் கறுப்பு நிற பெண் ஒருத்தியை விவாகம் செய்து கொள்ள கூடாது என்பது என் கருத்து. அவ்விதமாகவே கறுப்பு நிறத்து ஆண், வெள்ளை நிற பெண் ஒருத்தியையோ அல்லது மஞ்சள் நிறத்தினர் கறுப்பு நிறத்தினரையோ விவாகம் செய்து கொள்ள கூடாது. நான் நம்புவது என்னவெனில் பழுப்பு, கறுப்பு, வெள்ளை நிறத்தினர் தேவனுடைய பூந்தோட்டமாக உள்ளனர். அவர்கள் ஒருவருக்கொருவர் இனச்சேர்க்கை செய்து கொள்ள கூடாது என்பதே. தேவன் அவர்களை அந்த விதமாகவே படைத்திருக்கிறார். அவர்கள் அந்த விதமாகவே இருக்க வேண்டும் என்பது என் கருத்து.

75. அழகான கறுப்பு நிற பெண், மிகவும் அறிவுள்ளவள், காண்பதற்கு நன்றாக இருக்கும் இளம் பெண், மற்ற பெண்களை போலவே அழகுள்ளவள். வெள்ளை நிறப் பையனை விவாகம் செய்து கொண்டிருப்பதைக் காண்பது எனக்கு ஏமாற்றம் அளிக்கிறது. அவள் வெள்ளையனை மணந்து **ம்யூலாடோ** பிள்ளைகளை ஏன் பெற வேண்டும்? (கறுப்பு நிறத்தினருக்கும் வெள்ளை நிறத்தினருக்கும் இடையே பிறக்கும் பிள்ளைகள் **ம்யூலாடோ** என்று அழைக்கப்படுகிறார்கள்) ஒரு புத்திசாலியான கறுப்பு நிறப்பெண் அவ்விதமான காரியத்தில் ஈடுபட ஏன் விரும்ப வேண்டும்? ஏனெனில் ஏதோ ஒன்று... அந்த கம்யூனிஸ்ட்கள், ஒரு அருமையான கறுப்பு நிறத்தினன் ஒரு வெள்ளை பெண்ணை மணந்து **ம்யூலாடோ** பிள்ளைகளை பெற ஏன் விரும்ப வேண்டும்?

76. அதில் எனக்கு நம்பிக்கை இல்லை, நீங்கள் இருக்கும் விதமாகவே இருக்க வேண்டும் என்பது என் கருத்து. நாங்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள். தேவன் என்னை இந்த விதமாக படைத்திருக்கிறார். என் நிறத்தை அவர் கறுப்பாக படைத்திருந்தால் நான் தேவனுக்கு என்று கறுப்பு நிறத்தினனாக இருக்க மகிழ்ச்சி கொள்வேன். அவர் என்னை மஞ்சள் நிறத்தினாக படைத்திருந்தால், நான் கிறிஸ்துவுக்கென்று மஞ்சள் நிறத்தினனாக இருக்க மகிழ்ச்சி கொள்வேன். அவர் என்னை வெள்ளையாக படைத்திருந்தால் நான் கிறிஸ்துவிற்கு வெள்ளையனாக இருக்க மகிழ்ச்சிகொள்வேன். அவர் என்னை பழுப்பு அல்லது சிவப்பு நிறத்தினனாக, சிகப்பு இனத்தினனாக அல்லது வேறு எந்த நிறத்தினனாக படைத்திருந்தால், நான் அந்த நிறத்திலேயே நிலைத்து இருப்பேன். அது நான், என் சிருஷ்டிகர் என்னை உண்டாக்கின விதமாகவே இருக்க பிரியப்படுவேன். (**கே.**ப. 425, பத்தி 162, 166-168)

77. சிலர் நாம் என்று இக்காலத்திற்குரிய செய்தியை ஏற்றுக்கொண்டோமோ, என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றோமோ, என்று நாம் கிறிஸ்துவுக்குள் மறுபிறப்பு அடைந்தோமோ, அன்று முதல் நாம் அனைவரும் ஒன்றே குலம். நமக்குள் அன்று முதல் குலம், கோத்திரம் பாகுபாடு ஏதுவும் கிடையாது ஆ ஹா! ஹா! ஓஹோ, ஓஹோ! என்று கும்மாளம் போடுகிறார்கள். ஆனால் அவர்கள் பக்தி காலையில் காணப்படும் மேகத்தை போலவும் , விடியற் காலையில் தோன்றும் பனியை போலவும் ஒழிந்து போகிறது. ஒரு வெள்ளையனும் ஒரு கறுப்பு நிற பெண்ணும் கிறிஸ்துவுக்குள் மறுபிறப்பு அடைந்தவர்கள், ஆனாலும் அவர்கள் ஒருவருக்கொருவர் விவாகம் செய்து கொள்ள கூடாது. அவர்கள் இருவரும் கிறிஸ்துவுக்குள் மறுபிறப்பு அடைந்தவர்கள் தான்? பின் ஏன் அவர்கள் ஒருவரை ஒருவர் திருமணம் செய்து கொள்ள கூடாது? நிறம் அவர்கள் ஜீவிக்கும் இடத்தின் தட்வெப்ப நிலைக்கு ஏற்றாற்போல் மாறுவதுதான். இடத்தின் சீதோஷண நிலையை பொறுத்து தானே? இதற்காக அவர்கள் ஏன் திருமணம் செய்ய கூடாது? பிரியமானவர்களே அவர்கள் ஒரே பூந்தோட்டத்தில் மலர்ந்த வெள்ளை நிற ரோஜாவும், சிவப்பு நிற ரோஜாவும். அவைகளை ஒன்றுக்கொன்று இனப்பெருக்கத்தில் கலப்புச்செய்ய கூடாது. அதே போன்று தான் நாமும் ஒரே பூந்தோட்டத்தில மலர்ந்த பல விதமான குலம், கோத்திரத்தில் தோன்றியவர்கள். இனப்பெருக்கத்தில் ஒரு குலகோத்திரத்தை மற்றொரு குலகோத்திரத்தோடு இணைக்க வேண்டாம். வாருங்கள், தேவன் நம்மை உண்டாக்கிய விதமாகவே இருக்க விரும்புவோம். ஒரு இனத்தை மற்றொரு இனத்துடன், ஒரு கோத்திரத்தை மற்றொரு கோத்திரத்துடன் இனச்

சேர்க்கையில் இணைக்க வேண்டாம். வெள்ளை ரோஜா, வெள்ளை ரோஜாவை பிறப்பிக்கட்டும். சிவப்பு ரோஜா சிவப்பு ரோஜாவையே பிறப்பிக்கட்டும். எதையுமே கலப்பு செய்தல், அது சரியல்ல. நல்லதல்ல. விவாகம் இம்மைக்குரியது. தியானியுங்கள் மத். 22:23-30, மாற்.12:23-25, லூக்.20:34-35

78. ஒரு வயலெட் பூவை எடுத்துக்கொள்ளுங்கள், அது முதலில் வெள்ளை நிறமாயிருந்தது. அதை தனியே விட்டு விட்டால் அது எப்போது வெள்ளை நிறமுள்ள பூவாகவே இருக்கும். அதை அவ்வாறகவே நீங்கள் வளர்க்க வேண்டும். தேவன் விதவிதமாக படைக்கிறவர். அது விதவிதமாக இருக்க விரும்புகிறார். ஆதலால் கலப்பு செய்தல் ஆபத்தானது ஆகும். கண்டிக்கப்பட வேண்டியதான செயல் ஆகும். அது தேவனுடைய திட்டத்தை பாழாக்குகிறது. அது மனித குலத்தை பாழாக்குகிறது. (**கலப்பு மார்க்கம்**, பக்கம் 27, பத்தி 1)

79. வேசிப்பிள்ளை கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது என்று கர்த்தர் உபாகமத்தில் கூறியுள்ளார். உபா. 23:2. **விபசாரம் அவ்வளவு மோசமானது.** பத்து தலைமுறைக்கும். பத்து தலைமுறையை நாற்பது ஆண்டுகளால் பெருக்கினால் நானூறு ஆண்டுகள் வரைக்கும் - கலப்பில் பிறந்த ஒருவன். தேவன் இணைத்ததை மீறி, மீறச் செய்தல். ஒரு ஸ்திரீ தன் கணவனுக்கு விரோதமாக வாழ்க்கையில் ஈடுபட்டு, ஒரு கணவன் தன் மனைவிக்கு விரோதமாக அசுத்தமான வாழ்க்கையில் ஈடுபட்டு கலப்பு பிள்ளையை தோன்றச் செய்தல். ஓ, அந்த ஸ்திரீ அவன் அழகாய் இருக்கிறான் அல்லாவா? பெரிய உருவம் கொண்டவன், உயரமானவன் எனலாம். அப்படித்தான் ஏவாளும் நினைத்திருப்பாள். அவள் கலப்பு பிள்ளையை பெற்றாள். அவன் தான் காயீன். காயீன் மூலம் இராட்சதர்கள் தோன்றினர். கலப்பு செய்தல் எப்பொழுதுமே தேவனால் சபிக்கப்பட்ட ஒன்று. கலப்பு மார்க்கத்தில் இருந்து விலகி நில்லுங்கள். அதை கலக்காதீர்கள். (**கலப்பு மார்கம்**, பக்கம் 27,28)

80. விபசாரமே கலப்பு மார்க்கம் என்கிற போது ஒரு குலத்தில் இருந்து, ஒரு கோத்திரத்தில் இருந்து, ஒரு இனத்தில் இருந்து மற்றொரு இனத்தோடு இனச்சேர்க்கை என்பது எவ்வளவு பெரிய பாதகம் என்பதை நீங்களே அறிந்து கொள்ள முடிகிறதா? ஆம் அந்த ஸ்திரீ கலப்பு பிள்ளையை பொற்றாள்.

81. தேவனுடைய ஆவியினால் பிறந்தவர்கள் தேவனுடைய குமாரரும், குமாரத்திகளுமாயிருக்கிறார்கள். அவர்கள் உலகத்துடன் கலப்பதில்லை. அவர்கள் கலப்புள்ளவர்கள் அல்ல. அவர்கள் தேவனுடன் நிலைத்து இருக்கிறார்கள் அவருடைய திட்டத்துடன் நிலைத்து இருக்கிறார்கள். அவருடைய ஆவியுடன் நிலைத்து இருக்கிறார்கள். அவர்களுக்கு கலப்பு எதுவும் தேவையில்லை. (**கலப்பு மார்க்கம்**, பக்கம் 28, பத்தி 1)

82. எந்த அருமையான, கண்ணியமான கறுப்பு நிற கிறிஸ்தவ பெண்மணி தனக்கு வெள்ளையனின் மூலம் குழந்தை உண்டாவதை விரும்புவாள்? நம்மை தேவன் இப்பொழுதுள்ள விதமாக படைத்திருக்கிறார். அவர் படைத்த விதமாகவே நாம் இருப்போம். அது சரிஎன்று நினைக்கிறேன். (**கலப்பு மார்க்கம்,** பக்கம் 34, பத்தி 1)

83. அப்படியானால் எந்த அருமையான, கண்ணியமான பிரமாண கிறிஸ்தவ பெண்மணி தனக்கு மற்றொரு இனத்தான் மூலம் ஒரு குழந்தை உண்டாவதை விரும்புவாள்? அது ஒரு பறையர் மூலமாகவோ ஒரு நாடார் மூலமாகவோ அல்லது ஒரு தேவர் மூலமாகவோ அவள் பிள்ளை பெற்றுக்கொள்வதை விரும்பமாட்டள். அவள் ஒரு அருமையான, கண்ணியமான கிறிஸ்தவ பெண்ணாக இருப்பதால் அவள் தன் இனம், குலம், கோத்திரம் வம்சத்தான் ஒருவன் மூலமாகவே குழந்தை உண்டாவதை விரும்புவாள். இதுவே வேத பூர்வமானது. அவர்கள் தங்களுக்கு இஷ்டமானவர்களை விவாகம் செய்யலாம். ஆனாலும், தங்கள் பிதாவின் கோத்திர வம்சத்தில் மாத்திரம் அவர்கள் விவாகம் செய்ய வேண்டும். எண். 36:6. விவாகம் எல்லாவற்றுக்குள்ளும் கனமுள்ளது. எபி. 13:4 கனமுள்ள ஒன்றில் என்றுமே கலப்படம் இருக்காது. ஆதலால் எனக்கு பிரியமானவர்களே வாருங்கள், நாம் எவ்விதமாக தேவனால் படைக்கப்பட்டிருக்கிறோமோ, அவ்விதமாக அதில் நிலைத்து இருப்போம். தேவனோ நீங்கள் உள்ளது போலவே உங்களை காண விரும்புகிறார். அது உண்மை. அது தான் சரியானது.

84. சில அதிகப்பிரசங்கிகள், திருமண வேளையில் திருமண அடையாள சின்னமாக மோதிரம் தான் அணிய வேண்டும். தாலி கொடி அணியக்கூடாது என தங்கள் சுய போதனையை சபைக்குள் தந்திரமாக கொண்டு வந்துள்ளார்கள். இது சாத்தானின் உபதேசம். இதற்கு செவி கொடுக்காதீர்கள். ஏனெனில் இது தவறு. ஆனால் பிரியமானவர்களே திருமண அடையாள சின்னமாக உங்கள் சமுதாயத்தில் உள்ள பெண்கள் என்ன அணிகிறார்களோ அதையே அணியுங்கள். அது மோதிரமாக இருந்தாலும் சரி அல்லது தாலிகொடியாக இருந்தாலும் சரி. அப்பொழுது தான் உங்கள் சமுதாயத்தில் அந்த பெண் ஒரு திருமணம் ஆனவள் என தெரிய வரும். மோதிரம் தான் அணிய வேண்டும் என கூற மோதிரத்தில் என்ன தேனா சுரக்கிறது? தாலி கொடி அணிய கூடாது என கூற அதில் என்ன வேம்பு எண்ணெயா சுரக்கிறது? சகோ.பிரன்காம் மோதிரம் அணிந்தார். அது அவர் நாட்டு கலச்சாரம். நமது பெண்கள் தாலி கொடி அணிகிறார்கள். இது நம் நாட்டு கலச்சாரம் சகோ. பிரன்காம் மோதிரம் அணிந்ததால் நாமும் அதையே அணிய வேண்டும். அவர் அனைத்து தேசத்திற்கும் தீர்க்க தரிசி. அதனால் அவர் கடைபிடித்ததை நாமும் கடைபிடிக்க வேண்டும் என்ற போதனை பிசாசினுடையது. இவர்கள் நாளை சகோ.பிரன்காம் சூட் அணிவதால் நாமும் சூட் அணிய வேண்டும். ஏனென்றால் அவர் அனைத்து தேசத்திற்கும் தீர்க்கதரிசி, ஆதலால் அவர் அணிந்த விதமாகவே நாமும் அணிய வேண்டும் என்று மற்றோரு உபதேசத்தை கொண்டுவருவார்கள். நான் தாலிகொடி அணிந்தால் திருமணம் செய்து வைக்க மாட்டேன், மோதிரம் அணிந்தால் தான் திருமணம் செய்து வைப்பேன் என்று உங்கள் பாஸ்டர் கூறுவாராகில் அது அவருடைய உலக, லௌகீக ஞானம். அது நமக்கு தேவையில்லை. இந்த சபை பிசாசினால் ஆளுகை செய்ப்பட்டு வருகிறது என அந்த சபை விசுவாசியே கூறுகிறார். ஆனால் அந்த ஆளுகைக்குள் இருந்து கொண்டு அவர் தான் மட்டும் தேவனால் வழிநடத்தப்படுகிறேன் எனக் கூறி பெருமைப்பட்டுக் கொள்வது ஒரு வெட்ககேடு.

85. திருமண நேரத்தில் திருமண அடையாளம் அணியபட வேண்டும். அது உங்கள் சமுதாயத்தில் நடைமுறையில் உள்ள ஒரு சின்னமாக இருக்க வேண்டும். நமது தமிழ்நாட்டை பொறுத்த வரையில் அது தாலிகொடியாகும். ஆனாலும் மோதிரம் அணிபவர்களும் உண்டு. அது ஒருவருடைய விருப்பம். இதில் மோதிரம் தான் அணிய வேண்டும் தாலிகொடி தான் அணிய வேண்டும் என்ற நிர்பந்தம் எதுவும் கிடையாது. மணமகன், மணமகள் சமுதாயத்தில் எதை அணிகிறார்களோ அதையே நாமும் அணிய வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் வாழும் சமுதாயத்தில் அவர்கள் திருமணம் ஆனவர்கள் எனத் தெரியும். சமுதாயத்தில் வழக்கமாக உள்ளதற்கு மாறாக ஒன்றை அணிவது ஆரோக்கியமான உபதேசம் அல்ல.

**86. நாம் திருமணத்தில் அடையாள சின்னம் ஒன்றை ஏன் அணிய வேண்டும்?**

அ. அது திருமணத்தில் ஆண் பெண் செய்து கொள்ளும் நல்மனச்சாட்சிக்கு, ஒப்பந்தத்திற்கு, உடன்படிக்கைக்கு ஒரு அடையாளமாக இருக்கிறது. அந்த அடையாளத்தை அவர்கள் காணும் போது அவர்கள் தங்கள் உடன்படிக்கையை நினைவுகூறுகிறார்கள். அவர்கள் செய்த உடன்படிக்கையை அது அவர்களுக்கு நினைப்புட்டுகிறது.

ஆ. அடையாளம் இல்லாதவரைக்கும், உடன்படிக்கையும் அங்கு இல்லை அந்த அடையாளம் உடன்படிக்கையாக இருக்கிறது. அந்த அடையாளம் மற்றவர்கள் காணும்படி பகிரங்கமாக காண்பிக்கப்பட வேண்டும். அந்த அடையாளம் இல்லையெனில் உடன்படிக்கையும் அர்த்தமற்றதாகிவிடுகிறது. சக்தியற்றதாகிவிடுகிறது.

இ. அது அவள் அவன் சரீரத்தின் ஒரு பாகமாக இருக்கிறாள் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது. அவள் அந்த அடையாளத்தை தன் வாழ்நாள் முழுவதும் பகலும் இரவும் அணிந்துஇருப்பாள். எந்த சமயத்திலும் அந்த அடையாளத்தை கொண்டவளாக இருக்கிறாள். நீங்கள் நான் ஒரு விசுவாசி. ஆதலால் அது தேவையில்லை என கூறலாம். அது சரியல்ல. நீங்கள் அந்த அடையாளத்தை புறக்கணித்தால், எப்படி அவள் உங்கள் சரீரத்தின் ஒரு பாகமாக இருக்க முடியும்? அவனுடைய சரீரத்தின் ஒரு பாகம் என்பதற்கு அது அவளுக்கு ஒரு வெளிப்புற அடையாளமாக இருக்கிறது. ஒரு மனிதன் தாலிகொடி அணிய வேண்டியது இல்லை. ஒருவன் தன் மனைவியை தெரிந்து கொள்ளும் போது அவள் சரியாக அவனுடைய மனைவியாக, தேவனால் கொடுக்கப்பட்ட மனைவியாக இருப்பாளானால், அவள் அவனுடைய பாகமாக இருப்பாள். (**சர்ப்பத்தின் வித்து** பக்கம் 28, பத்தி 1).

ஈ) நீங்கள் ஒரு கண்ணியமான வாழ்க்கை வாழலாம். தேவனுடைய வார்த்தைக்கு, இக்காலத்திற்குரிய செய்திக்கு செவிகொடுக்கலாம். நீங்கள் ஒரு சபைக்குச் சென்று நல்லவராக வாழலாம். அந்த வாழ்க்கை சரிதான். ஆனால் நீங்கள் அவருடைய சரீரத்தின் ஒரு பாகம் என்பதற்கு வெளிப்புற அடையாளமாக, நல்மனச்சாட்சியின் உடன்படிக்கைக்கு அடையாளமாக அந்த அடையாளத்தை அடையத்தான் வேண்டும். அது இல்லாமல் நீங்கள் அவருடைய சரீரத்தின் ஒரு பாகம் என்று கூற முடியாது. உதாரணமாக ஒரு தீர்க்கதரிசியை அவர் ஒரு செய்தியுடன் அனுப்பி, அக்கினி ஸ்தம்பத்தின் மூலம் அதை அடையாளம் கண்டு கொள்ளசெய்தார். ஜனங்கள் செய்தியை, செய்தியாளனை உறுதியாய் நம்புகிறதற்கென அந்த அடையாளத்தை அளித்தார். அதே போன்றுதான் ஜனங்கள் அவள் ஒரு திருமணம் ஆனவள், மற்றொருவனுடைய சரீரத்தின் பாகம் என அடையாளம் கண்டுகொள்ள அந்த அடையாளம் அணியப்படுகிறது.

உ) அவள் அந்த அடையாளத்தை தரித்திருக்கும் போது உங்களுடைய வார்த்தைக்கு முற்றிலும் கீழ்படியும் நிலைக்கு வந்துவிட்டாள் என்பதை அது காண்பிக்கிறது. அவள் அந்த அடையாளத்தை பெற்று உங்களுடைய ஒவ்வொரு வார்த்தைக்கும் கீழ்படிகிறவளாக காணப்படுகிறாள். அப்பொழுது அவளும் நீங்களும் ஒன்றாய் இருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் கையிடம் கையே எனக்கு அந்த கைக்குட்டையை எடுத்துக் கொடு என கட்டளையிட, அது கீழ்படிகிறது. ஏன்? அது உங்களுடைய சரீரத்தின் ஒரு பாகம். அவ்வாறாகவே அவளும் அந்த அடையாளத்தின் மூலம் உங்களுக்கு கீழ்படிந்து, உங்கள் சரீரத்தின் ஒரு பாகமாக ஆகிவிடுகிறாள். அப்பொழுது நீங்கள் இருவர் அல்ல. நீங்களும் அவளும் ஒன்று.

ஊ) ஞானஸ்நானம் தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கைக்கு அடையாளம். ஒரு வெளிப்புற அடையாளம். (1பேது. 3:21.)

எ) ஒருவர் கால்களை ஒருவர் கழுவுதல் ஒருவரில் ஒருவருக்கு பங்கு உண்டு என்பதற்கு அடையாளம். அதாவது ஒருவருக்குமேல் ஒருவருக்கு உரிமையுண்டு என்பதற்கு அடையாளம்.(யோ.13;8)

ஏ) இனி மாம்சமானவைகள் எல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லை, பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லை என தேவன் நம்மோடு அவருடைய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். அதற்கு அடையாளமாக மேகத்தில் வானவில்லை வைத்தார்.(ஆதி.9:11-17)

ஐ) இந்த அடையாளத்தை தீர்க்கதரிசி லூக்.15:8,9 வசனங்களோடு ஒப்பிட்டு, அந்நாட்களில் திருமணம் ஆன பெண் தன் தலையில் 10 வெள்ளிக்காசுகளைக் கொண்ட தலைமாலையை அணிந்திருந்ததாக கூறுகிறார். அந்த 10 வெள்ளிக்காசுகளும் அவளுடைய கற்புகளை எடுத்துக்காட்டுவதாக இருந்தது எனக் கூறுகிறார். மேலும் திருமணத்திற்கு அடையாளமாக பெண்கள் அடையாளம் ஒன்றை அணியவேண்டும் எனவும் கூறுகிறார். இதுகுறித்து The Second Coming of the Lord. என்ற செய்தியில் 11-வது பக்கம் முதல் நீங்கள் வாசிக்கலாம்.

87. திருமணம் இப்பிரபஞ்சத்திற்குரியது. இப்பிரபஞ்சத்திற்குரியதாதலால் நாம் பலுகி பெருக தேவன் நம்மை எந்த இனத்தில், எந்த குலத்தில் படைத்துள்ளாரோ அந்த இனத்தில், குலம், கோத்திரத்தில் பெண் கொண்டு, பெண் கொடுத்து, பலுகி பெருக கடவோம். அதில் கலப்படம் எதுவும் வேண்டாம். அன்று ஆபிரகாம் **என் இனம்** (ஆதி 28:4) என்று எதைக்கூறினாரோ, அவ்வண்மாகவே நானும் **என் இனம்** என்று கூறுகிறேன்.என் இனத்தார்கென்று பிரத்தியேகமான பண்பாடுகள், கலாச்சாரங்கள், பழக்கவழக்கங்கள், நடை உடை பாவனைகள், ஆகாரசமையல் கலைகள் போன்ற அநேக சமுதாய காரியங்கள் உண்டு. நான் அதிலே நிலைத்திருக்க விரும்புகிறேன். மற்றொரு இனப்பண்பாடுகளுடன், கலாச்சாரத்துடன் என்னை இணைத்துக்கொள்ள, பிணைத்துக்கொள்ள விரும்பவில்லை. ஏனென்றால் அது எனக்கு ஒரு ஒழுங்கின்மையாகும். நான் ஒன்றை சீர்குலைப்பதாகும். கோவை ராஜா வீட்டு சாப்பாடு சுவைக்கும் எனது வீட்டு சாப்பாடு சுவைக்கும், அவரது வீட்டு பண்பாடுகளுக்கும், எனது வீட்டு பண்பாடுகளுக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. இவ்வாறாக அனைத்துக் குடும்பக்காரியங்களிலும் வித்தியாசங்கள் உண்டு அப்படியிருக்க ஒன்றை மற்றொன்றோடு பிணைத்து, இணைத்து மற்றொரு கலப்படத்தை நான் ஏன் உருவாக்கவேண்டும்? அது அது, அதன் அதன் நிலையிலே இருக்கட்டும்.

88. ஆபிரகாம் தன் இனத்தில் தன் மகனுக்கு பெண்கொண்டான். ஆனால் எபிரேய ஸ்திரீயாகிய தீமோத்தேயுவின் தாய் ஒரு கிரேக்கனை திருமணம் செய்திருந்தாள். அப்.16:1. ஆதலால் நாம் திருமணக்காரியங்களில் அது அப்படித்தான் இது அப்படித்தான் என்றுக்கூறி, ஒவ்வொருவரும் ஒவ்வொரு உபதேசங்களைப் பிரசங்கித்துக்கொண்டு, ஒருவரையொருவர் பழித்துக் கூறிக்கொண்டு, ஒருவரையொருவர் இழிவாக பேசி, திட்டி தீர்த்துக்கொள்ள இடம் கொடுக்காமல் அவரவர்களுடைய சுயாதீனத்திற்கு விட்டுக்கொடுத்து விட்டால் அதுவே நலம் என கிறிஸ்துவுக்குள் நினைக்கிறேன்.

89. மேலும் சில உதாரணங்களை கவனியுங்கள். அன்று தாவீது, சாலொமோன் அந்நியஜாதியின் பெண்களை திருமணம் செய்தார்கள் அதை தேவன் விரும்பியதில்லை. அதுகுறித்து அவர்களை எச்சரித்தார். மேலும் எஸ்றா, நெகேமியா போன்றவர்கள் மறுஜாதி பெண்களையோ, அவிசுவாசிகளையோ திருமணம்செய்வதற்கு எதிர்த்து நின்றார்கள். நானும் அவ்வாறு எதிர்த்து நிற்கிறேன். உங்கள் நிலையை உங்கள் சுயாதீனத்திற்கு விட்டுவிட்டேன்.

90. திருமணத்தில் பெண் தன் தகப்பனிடத்திலிருந்து சீதனமாக எதையும் கேட்டு பெற்றுக்கொள்வது அல்லது அவள் கேளாமலேயே அவள் தகப்பன் அவளுக்கு கொடுப்பது வேதப்பூர்வமானது. ஆதலால் சீதனமாக கொடுப்பது, வாங்குவது கூடாது என்று உபதேசிப்பது, வாங்கமாட்டோம், கொடுக்கமாட்டோம் என்று பெருமை பாராட்டுவது அறிவில்லாத அற்பத்தனம். உள்ளே ஆசை, வெளியே நாடகம். சீதனம் குறித்து நீங்கள் யோசுவா 15:19, 1இரா.9:16யை தியானியுங்கள். ஆனால் திருமணத்தில் இதைக் கொடுக்க வேண்டும் என கட்டாயமான ஒரு நிபந்தனையை முன்வைப்பது கூடாது. அப்படிப்பட்ட வரதட்சணைக் கொடுமை நம் மத்தியில் இருக்ககூடாது. மனதார சீதனம் கொடுப்பது, வாங்குவதில் தவறு எதுவும் இல்லை.

91. நான் இந்த செய்தித்தொகுப்பை இதுவரை எழுதியிருப்பதில் உங்களுக்கு ஆவியில் ஒருமனப்பாடு இருந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளுங்கள். இதை நான் உபதேசமாக தேவனுடைய சபைக்குள் கொண்டுவரவில்லை. ஏன்னென்றால் திருமணமானது இப்பிரபஞ்சத்திற்குரியது. இப்பிரபஞ்சத்திற்குரிய ஒரு காரியத்தில் நான் ஒரு உபதேசத்தை உங்கள் மீது திணிக்கமுடியாது. ஆதலால் இதில் உங்கள் சுயவிருப்பு வெறுப்புகளுக்கு உங்களை ஒப்புக்கொடுக்கிறேன். நான் எழுதியவைகளில் தவறு உண்டு என்று நீங்கள் நினைத்தால் அதை அப்படியே விட்டு விடுங்கள். இதில் நமக்குள் வாக்குவாதம் வேண்டாம். உலகபிரகாரமான காரியங்களில் வாக்குவாதம் செய்ய எனக்கு மனமில்லை.

92. திருமணம் இம்மைக்குரியதாதலால் அதை ஆவிக்குரிய காரியங்களோடு ஒப்பிட்டு பேசக்கூடாது. திருமணம் ஏன்? இனஅபிவிருத்தியே அதன் முக்கிய நோக்கம். இனம் இனத்தையே பிறப்பிக்கட்டும். ஒரு ஜாதி தன் ஜாதியையே பிறப்பிக்கட்டும். அதை அப்படியே அதன் நிலையில் விட்டு விடுவோம். அதில் கலப்படம் வேண்டாம். திருமணம் இம்மைக்குரியது. ஆதலால் ஒரு இம்மைக்குரிய எடுத்துக்காட்டை எழுதுகிறேன். **தினகரன்** என்ற பத்திரிக்கையில் **வெள்ளிமலர்** 25.7.1997. அதில் **பூவையர் பூங்கா** பகுதியில் இ.துவரை 200 சிறுகதைகள், 5 நாவல்கள், 3 குறுநாவல்கள் எழுதியுள்ள கமலா சடகோபன் அவர்களிடம் ஒரு கேள்வி. அது கலப்புத்திருமணத்தைப் பற்றி உங்கள் கருத்து என்ன என்பதைப்பற்றியது ஆகும். அதற்கு அவர்கள் கொடுத்த பதில்: **இத்தகைய திருமணங்களை நான் ஆதரிப்பது இல்லை. சாதாரணமான பொருட்களில் கலப்படம் செய்தாலே அது நமக்கு ஒத்துக்கொள்வதில்லை. திருமணத்தில் மட்டும் அது அவசியமா? திருமண வாழ்க்கையில் பிரச்சனைகள் ஏற்படவும் இதுதான் காரணம். குடும்பத்தில் பிரச்சனைகள் வரும்பொழுது, கணவனும் மனைவியும் உடனே ஜாதியையும், மதத்தையும் அதற்கு காரணமாக சுட்டிக்காட்டுவார்கள்.**

93. அவர்களுடைய இந்த அனுபவத்தை நான் நம்முடைய செய்தியிலிருக்கும் சில சகோதரர்களிடம் அவர்களுடைய கலப்புத்திருமணமான இல்லற வாழ்க்கையில் கண்டேன். வலசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல் அவர்கள் தன் சபையில் ஒரு கலப்புத்திருமணத்தை நடத்திவைத்தார்கள். இரு குடும்பங்களும் அந்த திருமணத்திற்கு இசைவு கொடுத்த பின்புதான் அதை நடத்தி வைத்தார். ஆதலால் இதில் அவரிடம் தவறு ஒன்றுமில்லை. காலங்கள் கடந்தன. கணவனுக்கும் மனைவிக்கும் குடும்பத்தகராறு ஏற்பட்டது. அந்த சகோதரர் என்னிடம் தான் கலப்புத்திருமணம் செய்ததினால் வந்த விளைவு இது என என்னிடம் கூறினார். அவள் தன் ஜாதி குணத்தை காட்டிவிட்டாள் என மனம் நொந்து முறையிட்டார். ஆம் பிரியமானவர்களே, இல்லற வாழ்க்கை நன்றாக ஓடிக்கொண்டிருக்கும் போது இனம் குலம் கோத்திரம் குறித்து ஒன்றும் தெரியாது. ஆனால் குடும்பத்தில் பிரச்சனைகள் வரும்போதுதான் ஒருவருக்கொருவர் ஜாதியையும் மதத்தையும் குறித்து குறைகூறி திட்டிக்கொள்ளுவார்கள். ஆக அந்த சகோதரன் அன்று கலப்புத்திருமணம் செய்ததைக் குறித்து இன்று வருத்தப்படுகிறார்.

94. இங்கே பாருங்கள், மானிடஇனத்தை இன்று கொல்லுவது என்ன? மாறுபட்ட இனங்களைச் சேர்த்து கலப்பு இனங்களை உருவாக்குகிறார்கள். நீங்கள் அதை கலப்பினம் ஆக்கும் பொழுது அதை கொன்று போடுகிறீர்கள். **(தேவனால் அருளப்பட்ட ஒரே ஆராதனை ஸ்தலம்**, பத்தி 194, நாள் 28.11.1965.)

95. பாருங்கள், சபையிலும் அதே காரியம் தான் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அவர்கள் இக்காலத்திற்குரிய செய்திக்குள் தங்கள் பழைய ஸ்தாபன கோட்பாடுகளை நுழைக்கிறார்கள். கலப்படம் எப்பொழுதுமே அழகாக இருக்கும். ஆதலால் இவர்கள் சபையில் அங்கத்தினர்கள் அதிகமாக காணப்படுகின்றனர். ஆதலால் அவர்கள் சபை பார்ப்பதற்கு ரொம்ப கவர்ச்சியாக வெளிப்பார்வைக்கு தோற்றம் அளிக்கிறது. ஆனால் அவர்கள் உள்ளே செத்தவர்கள். அந்த சபை ஆவிக்குரிய மரணம் அடைந்துவிட்டது. நான் யார்யாருடைய சபைகளை குறித்து எழுதுகிறேன் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

96. நாம் வாழும் இந்த உலகில் 193 நாடுகள், 3000 மொழிகள் இருக்கின்றன என எனது கடைசிமகள் பாடப்புத்தகத்தின் மூலம் அறியவந்தேன். நாம் இவ்வுலகில் இனம், குலம், ஜாதி, கோத்திரம், நாடு, மொழி, தேசம் போன்ற பாகுபாடுகளின் மத்தியில் இனச்சேர்க்கையிலே பிறந்து மாம்சத்தில் இருக்கையிலே, விண்ணுக்குரிய பிரகாரமாக ஒரு புது சிருஷ்டியாகவும் பிறக்கிறோம். ஒரு புதிய மனுஷனை சிருஷ்டிக்கும் தேவனுடைய புதிய படைப்பாக அது இருக்கிறது. புதிய சிருஷ்டிப்பு என்பது ஒரு பிறப்பாகும். மாம்சத்தின் பிறப்பு போலவே, ஆவிக்குரிய பிறப்பும் நமக்கு அவசியமாய் இருக்கிறது.

97. மாம்சத்திற்குரிய பிறப்பில் நாம் பல ஜாதி, இனம், குலம், கோத்திரம், மொழி, தேசங்களைக் கொண்டு வாழ்ந்தாலும் விண்ணுக்குரிய பிரகாரமாக ஒரு புதிய சிருஷ்டிப்பாக ஜாதி, இனம், குலம், கோத்திரம், மொழி, தேசங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு புதிய சிருஷ்டிப்பாக, ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம் தீர்க்கப்பட்டவர்களாக இருக்கிறோம். இனச்சேர்க்கையின் பலனாக உண்டான மாம்சசரீரத்தில் கணவன், மனைவி, பிள்ளைகள், மாமன், மருமகன் போன்ற உறவுகள் உண்டு. ஆனால் தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறந்த புதிய சிருஷ்டிப்பில் கணவன், மனைவி பிள்ளைகள், மாமன், மருமகன் போன்ற உறவுகள் இல்லை. அதோடு மட்டும்மல்ல இதில் யூதன், கிரேக்கன், இந்தியன் என்றும் இல்லை. அதோடு மட்டும் அல்ல இந்த புதிய சிருஷ்டிப்பில் ஆண், பெண் என்றும் இல்லை. அவர்கள் அனைவரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாக இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஒன்றாக கிறிஸ்துவின் மணவாட்டியாக (மணவாட்டிகளாக அல்ல) ஒரே சரீரமாக இருக்கிறார்கள். தியானியுங்கள் கலா.3:27-29 வசனங்கள். ஆக பிரியமானவர்களே இரு பிறப்புகளிலும் தேவன் தமது பிரமாணங்களை விதித்துள்ளார். எனவே யாவும் அவருடைய பிரமாணங்களின் படித்தான் நடைபெற வேண்டும். இப்போது கவனியுங்கள் ஒன்று மாம்சசரீரத்தைக் கொண்ட ஒரு உலகப்பிரகாரமான வாழ்க்கை. மற்றொன்று ஆவிக்குரிய சரீரத்தைக்கொண்ட ஒரு ஆவிக்குரிய வாழ்க்கை. இரண்டையும் இணைக்ககூடாது. முடியாது.

இரண்டிற்கும் வானத்திற்கும் பூமிக்கும் இடையே உள்ள தூரம் அளவிற்கு வித்தியாசங்கள் உண்டு. கலப்புத்திருமணத்தில் நீங்கள் இப்பிரபஞ்ச வாழ்க்கையையும், ஆவிக்குரிய வாழ்க்கையையும் இணைக்கிறீர்கள். நிச்சயமாக அது கிரியை செய்யாது.

98. அந்த இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு ஆசாரியராஜ்யமும், பரிசுத்த ஜாதியும் ஆகும். யாத்.19:6 இஸ்ரவேல் குடும்பம் கர்த்தருடைய ஜனம். எரே.33:33, ஏசே.37:27, உபா..32:9, 27:9, எபி. 8:10. இஸ்ரவேல் தேவனுடைய சொந்த ஜனம். உபா.26:18, இஸ்ரவேல் தேவனுடைய பரிசுத்த ஜனம் உபா 14:21, 7:6. இஸ்ரவேலர் தேவனுடைய மீட்கப்பட்ட ஜனங்கள். ஏசா.62:12, அதோடு மட்டும் அல்ல இரட்சிக்கப்பட்ட ஜனம் உபா.33:29. ஆனால் அன்று இந்த ஜனங்கள் மத்தியில்தான் பல கோத்திரங்கள் இருந்தன. ஒரு கோத்திரத்தில் உள்ள மனிதன் அடுத்த கோத்திரத்தில் உள்ள ஒரு பெண்ணை விவாகம் செய்து கொள்ளக்கூடாது என்ற கட்டளையை பெற்றார்கள்.

99. சபைக்காலங்களில் அந்தந்த காலத்தின் தூதனுடைய செய்திக்கு செவிகொடுத்து, அதன்படி நடந்து பரிசுத்த ஆவியைப்பெற்ற, தெரிந்துக்கொள்ளப்பட்ட மக்கள், திருவசனத்திற்கு கீழ்படிந்த மக்கள் தெரிந்துக் கொள்ளப்பட்ட சந்ததி, ராஜரீகமான ஆசாரிய கூட்டம், பரிசுத்த ஜாதி, அவருடைய சொந்த ஜனங்கள் 1 பேது. 2:8-10 அவர்கள் தேவனுடைய ஜனங்கள் 2 கொரி.6:16, வெளி.21:3. அவர்கள் இரட்சிக்கப்பட்ட ஜனங்கள். வெளி 21:24 தேவனுடைய ஆவி இவர்களுக்குள் வாசமாய் இருக்கிறது. ஏனென்றால் கிறிஸ்துவினுடைய ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல. ரோ.8:9,10. அப்படியானால் தேவனுடைய ஆவியுடையவன் அவருடையவன். தேவனுடைய ஆவி, பரிசுத்த ஆவியாகும். பரிசுத்த ஆவி உங்களுக்குள் வாசம் செய்தால் உன் இருதயத்தில் தேவ அன்பு ஊற்றெடுக்கவேண்டும். நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவனுடைய அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது. ரோ.5:5 இன்று யார் உள்ளத்தில் தேவஅன்பு ஊற்றெடுக்கப்பட்டுள்ளது? ஒருவன் தேவ அன்பு தன் உள்ளத்தில் ஊற்றெடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறுவானாகில் அவன் பொய்யன் மாய்மாலக்காரன். தேவ அன்பு தன் உள்ளத்தில் ஊற்றெடுக்கப்பட்ட ஒரு மனிதனை காணமுடிவதில்லை. உங்கள் பாஸ்டர்கள் யாரிடத்திலும் கூட காணமுடிவதில்லை. உங்கள் உடன் விசுவாசிகள் யாரிடத்திலும் கூட காணமுடியவில்லை. இப்படி இருக்க அவர்கள் தங்களை கிறிஸ்துவின் மணவாட்டி, மணவாட்டி என அழைத்துக்கொண்டு தங்களைத்தாங்களே வஞ்சித்துக்கொண்டிருக்கிறார்கள்.

100. சகோதரனே, சகோதரியே நீ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் மட்டும் பெற்று விட்டால், அது போதாது. நீ பரிசுத்த ஆவியை, தேவனுடைய ஆவியை பெற்றிருக்க வேண்டும். நீங்கள் பரிசுத்த ஆவியை பெற்றிருப்பீர்களாகில் உங்களிடத்தில் ஆவியின்கனிகள் காணப்படவேண்டும். அப்படியானால் அதன் கனிகள் உங்களிடத்தில் உண்டா? நீங்கள் சற்று யோசித்துப்பாருங்கள். காலேப் யோசுவா உங்களுக்கு ஆதரவாக பேசவில்லையென்றால் அவருக்கு கொடுத்து வந்த காணிக்கையை, உதவிகளை நிறுத்துகிறீர்கள். அவருடன் ஐக்கியம் வேண்டாம் என்கிறீர்கள். காலேப் யோசுவா உங்களை புகழ்ந்த நேரத்தில் அவரைக் கட்டி தழுவிக்கொண்டீர்கள். இதுதான் உங்களுடைய தெய்வீக அன்பா? நீங்கள் பரிசுத்த ஆவியை பெற்றிருந்தால் பரிசுத்த ஆவியின் கனி உங்களிடத்தில் காணப்பட்டிருக்குமே? மேலும் நீங்கள் தேவனுடைய வார்த்தை, இக்காலத்திற்குரிய செய்திக்கு கீழ்படிந்து நடந்திருப்பீர்களே! அதோடு மட்டும்அல்ல உங்கள் சரீரம் தேவன் வாசம் செய்யும் ஆலயமாக காணப்பட்டிருக்குமே. (கலா.5:22-25,1கொரி. 3:16) ஆனால் உங்கள் நிலை வித்தியாசமாக அல்லவா இருக்கிறது? தேவனுடைய வார்த்தை உங்களை நியாயம் தீர்க்கிறதை நீங்கள் அறியாதிருக்கிறதென்ன?

101. இப்பொழுது கிறிஸ்துவின் ஆவி உங்களுக்குள் இருக்குமானால், நீங்கள் அவருடைய சரீரத்தின் அவயவங்கள். இந்த அவயவங்களுக்குள் மட்டுமே யூதன் என்றும் இல்லை, கிரேக்கன் என்றும் இல்லை, அடிமை என்றும் இல்லை, சுயாதீனன் என்றும் இல்லை, ஆண் என்றும் இல்லை, பெண் என்றும் இல்லை. அவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாய் இருக்கிறார்கள். (கலா. 3:27-28) ஆக கிறிஸ்துவின் சரீரத்திற்குள் யூதன் என்றும் இல்லை, கிரேக்கன் என்றும் இல்லை, ஆண் என்றும் இல்லை, பெண் என்றும் இல்லை. இப்படி இருக்க திருமணம் இவர்கள் மத்தியில் எங்கே? பெண் கொள்வனையும் கொடுப்பனையும் எங்கே? பிரியமானவர்களே, இப்பொழுதாவது நான் போதிப்பது, எழுதுவது உங்களுக்கு புரிகிறதா? விவாகம் முற்றிலுமாக இம்மைக்குரியது, இப்பிரபஞ்சத்திற்குரியது. அதில் குலம், இனம், கோத்திரம் உண்டு. இனப்பெருக்கத்தில் அதுஅது, தன்தன் இனத்தை பிறப்பிக்கட்டும். அதை அப்படியே விட்டுவிடுங்கள். அதில் கலப்படம் ஏதும் வேண்டாம்.

102. கிறிஸ்துவுக்குள், அந்த பரிசுத்த ஜாதிக்குள், கிறிஸ்துவின் சரீரத்தில் ஆண் என்றும் இல்லை, பெண் என்றும் இல்லை. அவர்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறார்கள். அங்கு கொள்வனையும் கிடையாது, கொடுப்பனையும் கிடையாது. அங்கு கணவன் மனைவி உறவு இல்லை. அங்கு மாமன் மருமகன் உறவு இல்லை. அங்கு அக்காள் தங்கை உறவு இல்லை. அங்கு அம்மா அப்பா உறவும் இல்லை. நாம் அனைவரும் கிறிஸ்துவின் சரீரத்தில் தனித்தனியே ஒவ்வொரு அவயவங்களாய் இருக்கிறோம். இவர்கள் ஆவிக்குரியவர்கள். இவர்கள் குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது. பாருங்கள் இவர்கள் வெளியே அழைக்கப்பட்டு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றவர்களாய், தேவனுடைய ஆசீர்வாதங்களினால் நிரப்பப்பட்டு, பரிசுத்தவான்களாய் ஒன்றுகூடி உன்னதங்களில் உட்கார்ந்திருக்கிறார்கள். அதாவது தேவனுடைய ஆவி இவர்களை பரலோகத்தின் சூழ்நிலைக்கு கொண்டு வந்துள்ளது. இவர்களுடைய ஆத்மாவில் இவர்கள் பரலோகத்தை சேர்ந்தவர்களாய் இருக்கிறார்கள். (எபே. 1:3)

103. கலப்புத்திருமணம் குறித்து நான் இங்கே எழுதியுள்ளவைகள் யாவும் நான் முன்பே பிரசங்கித்ததும், பேசியதும், உபதேசித்தவைகளுமே ஆகும். இதனால் நான் அநேக சகோதரர்களை இழக்கவும் நேரிட்டது. அது குறித்து நான் என்றுமே கவலைப்பட்டது கிடையாது. நான் உங்களில் யாரையும் பிரியப்படுத்த இந்த செய்தித் தொகுப்புக்களை எழுதி வருவது கிடையாது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய தேவன் என் உள்ளத்தில் வைத்தவைகளையே சபைக்கு எழுதுகிறேன். விளைய செய்வது என் காரியம் அல்ல. அது கர்த்தருடைய காரியம். ஆதலால் நான் எழுதியவைகளின் விளைவை அவர் பார்த்துக்கொள்வார்.

104. பொதுவாக ஒருவன் சத்தியத்தை கூறும்போது அவன் அநேகருக்கு சத்துரு ஆகிறான் என்பதே வேத வாக்கியம். ஆதலால் யார் என்ன கூறினாலும் சரி, இந்த வனாந்தர வாழ்க்கையில் மனுக்குலத்தின் மத்தியில் இனம், குலம், கோத்திரம், நாடு, தேசம் உண்டு. இதை யாரும் மறுக்க முடியாது. ஆதலால் அந்தந்த இனம் அந்த இனத்தை பிறப்பிக்கட்டும். இதில் கலப்படம் ஏன்? வேண்டாம், வேண்டாவே வேண்டாம்.

105. ஆனால் கிறிஸ்துவுக்குள் இனம், குலம், கோத்திரம், நாடு, தேசம், அடிமை, முதலாளி, ஏழை, பணக்காரன், பெரியவன், சிறியவன், யூதன், கிரேக்கன், ஆண், பெண் என்ற பாகுபாடுகள் எதுவும் இல்லை.

106. ஆனால் இந்த வனாந்திர யாத்திரையில் ஜான் ஐசக் என்ற ஆண் உண்டு, ஜாய் மேரி என்ற பெண் உண்டு. யோவேல் மூடி பரமானந்தம் என்ற ஐசுவரியவான் உண்டு. காலேப் யோசுவா என்ற தரித்திரன் உண்டு. சாமுவேல் என்ற பெரியவர் உண்டு, ஜெயசீலன் என்ற சிறியவன் உண்டு. சார்லஸ் விஜயகுமார் என்ற எஜமான் உண்டு, பொன்னாடு என்ற வேலையாள் உண்டு. தேவநேசன் என்ற முதலாளி உண்டு, மணிமாறன் என்ற தொழிலாளி உண்டு. கலிஸ்த்ராஜ் என்ற ஏமாற்றுக்காரன் உண்டு, ஜேஸ்பர் என்ற ஏமாளியும் உண்டு. ராஜா என்ற பொய்யனும் உண்டு, சத்திய ஆவி என்ற உண்மையாளனும் உண்டு. பாருங்கள் அன்று பேய்க் கொம்மட்டியாகிய கோவை ராஜாவை யார் என்று தெரியாது ஏற்றுக் கொண்டு அவருடன் சூளை, இயேசு கிறிஸ்து சபை உறவு கொண்டாடியது. அவர் நாங்கள் 85% என்று கூறி சபைக்குள் சாவை கொண்டுவந்தார். அவர்கள் 85% என்றால் மீதி 15% என மற்றொன்று இருக்கத்தானே செய்கிறது? அவர்கள் வாயின் வார்த்தையே, அவர்கள் கரங்களின் எழுத்தே அவர்கள் யார் என்று சாட்சி கொடுக்கிறது. ஆனால் கிறிஸ்துவுக்குள் இந்த 85%, 15% கிடையாது. ஆனால் இங்கு 85%, 15% உண்டு. ஆக இந்த வனாந்திர யாத்திரையில் இத்தனை பாகுபாடுகளும் உண்டு. இதை நீங்கள் யாரும் மறுக்க முடியாது. ஆனால் கிறிஸ்துவுக்குள் இவை ஒன்றுமே கிடையாது ஐயா!

107. ஆனால் நான் மேற்கூறிய இத்தனை பேரும் நாங்கள் கிறிஸ்துவின் மணவாட்டிதான் என்று சொல்லுகிறார்கள். ஆனால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் இத்தனை பாகுபாடுகள் இல்லையே? கிறிஸ்துவின் சரீரத்தில் இத்தனை ஏற்றத்தாழ்வுகள் இல்லையே? கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அவயவம் பாடுபட்டால் மற்ற எல்லா அவயவங்களும் கூடப்பாடுபடும்படி சரீரத்தை தேவன் அமைத்திருக்கிறாரே! ஆதலால் சிந்தியுங்கள், செயல்படுங்கள். இது சிந்தித்து செயல்படும் காலமாய் இருக்கிறது.

108. முடிவாக என் சகோதரரே, விவாகம் எல்லாவற்றிற்குள்ளும் கனம் உள்ளது. ஆதலால் விவாக மஞ்சம் அசுசிப்படாதபடிக்கு நாம் காத்துக்கொள்ள வேண்டும். ஆதலால் நீங்கள் பல விதமான போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள். இனப்பெருக்கத்தில் ஒரு இனம், ஜாதி, குலம், கோத்திரம் மற்றொன்றுடன் கலப்படம் செய்ய இடம் கொடுக்காதீர்கள். அதோடு மட்டுமல்ல. எந்த சூழ்நிலையிலும் ஒரு விசுவாசி, ஒரு அவிசுவாசியை திருமணம் செய்ய கூடவே கூடாது. ஒரு விசுவாசி, ஒரு அவிசுவாசியோடு சம்பந்தம் கலப்பது நிந்தையாய் இருக்கும். உங்கள் இனத்தில் உள்ள ஒரு விசுவாசியை திருமணம் செய்துகொள்ளுங்கள். எவ்வாறு ஒரு விசுவாசி ஒரு அவிசுவாசியோடு பிணைபட கூடாதோ, அதே போன்று ஒரு ஜாதி, இனம் மற்றொரு ஜாதி, இனத்தோடு பிணைப்பட கூடாது. ஒரு வேளை நீங்கள் சகோதரனே எங்கள் இனத்தில் எங்களிடமிருந்து பெண் கொள்ள, பெண் கொடுக்க மற்றொரு விசுவாச குடும்பத்தினர் இல்லையே என அங்கலாய்த்து கொள்ளலாம். ஆனால் தேவனால் கூடாத காரியம் ஒன்றும் இல்லை என்ற வேதவாக்கை மறந்து விடாதீர்கள். வானமும் பூமியும் ஒழிந்து போகும். ஆனால் தேவனுடைய வார்த்தையோ ஒரு காலும் ஒழியாது. அவர் உங்கள் மகனுக்காக, உங்கள் மகளுக்காக உங்கள் இனத்திலே ஒரு விசுவாச குடும்பத்திலே ஒரு மணமகளை, ஒரு மணமகனை வைத்திருக்கிறார். அவரே எலியேசராக இருந்து மணமகளை, மணமகனை கொண்டு வருவார். பாரத்தை அவர் மேல் வையுங்கள். அவர் உங்களுக்காக எல்லாவற்றையும் செய்து முடிப்பார். அல்லேலூயா!

109. ஒரு விசுவாசி ஒரு அவிசுவாசியை திருமணம் செய்யக்கூடாது. ஏன்? அதாவது, விசுவாசத்தில் உள்ள ஒருவன், தன்னுடன் விசுவாசத்தில் அல்லாத ஒரு பெண்ணை திருமணம் செய்யக்கூடாது. அந்தவிதமாகவே விசுவாசத்தில் உள்ள ஒரு பெண், தன்னுடன் விசுவாசத்தில் அல்லாத ஒரு ஆணை திருமணம் செய்யக்கூடாது. ஏனென்றால் அந்த அவிசுவாசி, இந்த விசுவாசியை அவர்கள் விசுவாசத்தை விட்டு விலகச்செய்வார்கள். பாருங்கள் விசுவாசி, பெண் ஆபரணங்களினால் தன்னை அலங்கரிக்கக்கூடாது என்பான். பூமாலைகள் கழுத்தில் போடக்கூடாது என்பான். தலையில் பூக்கள் சூடக்கூடாது என்பான். ஆனால் அவிசுவாசியாகிய பெண்வீட்டார் நாங்கள் திருமணத்தில் அவளுக்காக செய்துவைத்திருந்த 30 பவுன் நகைகளையும் அவளுக்கு அணிவித்து, அவளுடைய கழுத்தில் மாலைகள் அணிவித்து, தலையில் பூக்கள் சூடி அலங்கரித்து அவளை பார்க்க ஆசை உள்ளவர்களாக இருக்கிறோம். ஆதலால் நாங்கள் அவளை நிச்சயமாக அலங்கரிப்போம் என்பார்கள். ஆனால் இந்நாட்களில் பூமாலைகள் யாருக்குத்தான் அணிவிப்பது என்ற விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது. பொன் ஆபரணங்களையும் யாருக்குத்தான் அணிவிப்பது என்ற வித்தியாசமே இல்லாமல் போய்விட்டது. கல்லுக்கும் பூமாலைதான், பொன் ஆபரணங்கள் தான். உயிரோடு இருக்கிறவளுக்கும் பூமாலைகள் தான், பொன் ஆபரணங்கள் தான். செத்தவனுக்கும் பூமாலைகள் தான், பொன் ஆபரணங்கள் தான். அவ்வாறாகவே ஒரு பெண்ணையும் பொன் ஆபரணங்களினாலும், பூமாலைகளினாலும் அலங்கரித்து அழகு பார்க்கிறார்கள். அதே நேரத்தில் ஒரு கற்சிலையையும், செத்தவளையையும் அவ்வண்ணமாகவே அலங்கரிக்கிறார்கள், அழகு பார்க்கிறார்கள். ஆக முடிவில் திருமணத்தில் ஒரு பெண்ணை உயிரற்ற கற்சிலையாக்கி விடுகிறார்கள்.

110. அடுத்து ஒரு விசுவாசி பெண்ணுக்கு அவள் தன் கணவனுடன் திருமண வேளையில் செய்துகொண்ட நல்மனசாட்சி ஒப்பந்தத்திற்கு, உடன்படிக்கைக்கு அடையாளமாக தாலிக்கொடி அல்லது மோதிரம் அணிய வேண்டும் என்பார் மாப்பிள்ளை வீட்டார். அவிசுவாசியாகிய பெண் வீட்டார் அது வேண்டாம் என்பார்கள். உடன்படிக்கைக்கு அடையாளமாக எதுவும் தேவையில்லை என்பார்கள். பரிசுத்த வேதாகமத்தை ஒருவருக்கொருவர் கொடுத்து மாற்றிக்கொள்ளுங்கள் என்பார்கள். இவர்கள் அடையாளம் என்றால் என்ன என்று அறியாதவர்கள். கடைசியாக பணத்திற்காகவும், படிப்புக்காகவும், அழகுக்காகவும் முக்கியத்துவம் கொடுத்த இந்த விசுவாசி, அந்த அவிசுவாசிக்கு எல்லாவற்றிற்கும் இசைந்து, இணைந்து செல்வான். இப்படியாக அந்த அவிசுவாசி இந்த விசுவாசியை தன் விசுவாசத்தில் இருந்து வழி விலகச்செய்வார்கள். ஆதலால் ஒரு விசுவாசி ஒரு அவிசுவாசியுடன் திருமணத்தில் எக்காரணத்தை கொண்டும் பிணைபடக்கூடாது.

111. பாருங்கள் அந்நாட்களில் சாலொமோனை அந்த அவிசுவாசிகள் அவன் இருதயத்தை வழுகிப்போக பண்ணினார்கள். (1இரா. 11:3) அவன் தன் தகப்பனாகிய தாவீதை போல கர்த்தரை பூரணமாய் பின்பற்றாமல் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதாய் செய்தான். (1இரா. 11:6) அவன் அந்நிய தேவர்களை பின்பற்றினான். அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைபோல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை. (1இரா. 11:4) அவன் கர்த்தரை விட்டு தன் இருதயத்தை திருப்பினான்.

**112. எப்பொழுதுமே ஒரு அவிசுவாசி, ஒரு விசுவாசிக்கு கண்ணியாகவும், வலையாகவும், விலாக்களுக்குச் சவுக்காகவும், கண்களுக்கு முள்ளுகளாகவும் இருக்கிறான்.** தியானியுங்கள் யோசுவா. 23:13.

113. திருமணம் பெண் வீட்டில் நடக்கிறது. இது வேத வாக்கியங்களின் அடிப்படையில் தவறு. வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தால் திருமணம் மணமகன் வீட்டிலே நடைபெற வேண்டும். ஆதாரமாக யோவான் இரண்டாம் அதிகாரத்தில் இயேசு கலந்து கொண்ட கலிலேயாவிலுள்ள கானா ஊர் திருமணத்தை காண்கிறோம். திருமண விருந்தில் திராட்சை ரசம் குறைவுப்பட்டது. இயேசு தமது முதலாம் அற்புதத்தை செய்தார். இந்த திருமணம் மணவாளன் இல்லத்தில் தான் நடந்தது. அடுத்து மத்தேயு 22வது அதிகாரத்தை தியானிக்கலாம். இங்கும் திருமணம் மணவாளன் இல்லத்திலே நடந்தது. மூன்றாவதாக வெளிப்படுத்துதல் 19 வது அதி. இங்கும் ஆட்டுக்குட்டியானவரின் திருமணம் பரலோகத்தில் நடக்கபோகின்ற ஒன்றாக இருக்கின்றது. அதாவது ஆட்டுக்குட்டியானவரின் வாசஸ்தலத்தில் நடக்கப்போகிற ஒன்றாக இருக்கிறது. ஈசாக்கும் ரெபெக்காளையும் தன் இல்லத்திற்கு கூட்டிச்சென்று அங்கு அவளை திருமணம் செய்தான். இதை அடிப்படையில் கொண்டு திருமணம் மணமகன் இல்லத்திலே நடைபெற வேண்டும் என உபதேசிக்கின்றேன்.

114. கிறிஸ்துவ சமுதாயத்தில் மற்றும் இந்துக்கள் மத்தியிலும் கூட தகப்பன் சொத்தில் பெண்களுக்கு பங்கு கொடுப்பதில்லை. அதை ஈடுசெய்வதற்கு அவள் திருமணத்தில் அவளுக்கு ரொக்கப் பணமும், ஆபரணங்களும் சொத்தாக கொடுக்கப்படுகிறது. இதில் தவறு எதுவும் இல்லை. அத்துடன் திருமணத்தையும் பெண் வீட்டில் நடத்தி, திருமணச்செலவு பொறுப்புகளையும் பெண்வீட்டார் மீது சுமத்துகின்றனர். பெண் வீட்டில் திருமணம் நடக்கும் இந்த பாரம்பரியம் அன்றுமுதல் இன்று வரை நடைமுறையில் இருந்து வருகிறது. இதையும் ஆவிக்குரிய கிறிஸ்துவர்களாகிய நாம் உடைத்தெறிய வேண்டும். திருமணம் மணமகன் இல்லத்திலே நடைபெற வேண்டும். வாருங்கள் நாம் பாரம்பரிய கட்டுகளை தகர்த்தெறிவோம்.

115. திருமணச் சமயங்களில் ஒரு விசுவாச குடும்பத்தினர் அவிசுவாசத்தில் உள்ள குடும்பத்தினருக்கு இக்காலத்திற்குரிய செய்தியை எடுத்துக்கூறி, பிரசங்கித்து அதன் பலனாக அவர்கள் திருமணத்திற்காக அல்ல. மாறாக உள்ளத்தில் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் அந்த பெண், அல்லது அந்த மனுஷன் ஞானஸ்நானம் பெற்றால், அது ஒரு விசுவாசி ஒரு விசுவாசியையே திருமணம் செய்துகொள்வதாக கருதப்படும். இதற்கு நான் ஆதாரமாக எடுத்துக்கொண்ட பகுதி ஆதியாகமம் 34 அதிகாரத்தில் உள்ளது. லேயாள் யாக்கோபுக்கு பெற்ற குமாரத்தி தீனாள். ஏவியனான ஏமோரின் குமாரனும் அத்தேசத்தின் பிரபுவுமாகிய சீகேம் என்பவன் அவளைக் கண்டு, அவளைக் கொண்டுபோய், அவளோடு சயனித்து, அவளை தீட்டுப்படுத்தினான். சீகேமின் மனது தீனாள் மீது பற்றுதலாய் இருந்தது. அவன் அவளை மனைவியாக்கவே விரும்பினான். யாக்கோபுவின் குமாரர், சீகேமுக்கும், அவன் தகப்பனாகிய ஏமோருக்கும் வஞ்சகமான மறுமொழியாக: விருத்தசேதனம் இல்லாத புருஷனுக்கு நாங்கள் எங்கள் சகோதரியை கொடுக்கக் கூடாது: அது எங்களுக்கு நிந்தையாக இருக்கும். நீங்களும், உங்களுக்குள்ளிருக்கும் ஆண்மக்கள் யாவரும் விருத்த சேதனம் பண்ணப்பட்டு எங்களைப்போல் ஆவீர்களானால், நாங்கள் சம்மதித்து, உங்களுக்கு எங்கள் குமாரத்திகளைக் கொடுத்து, உங்கள் குமாரத்திகளை எங்களுக்கு கொண்டு உங்களோடு குடியிருந்து, ஏக ஜனமாய் இருப்போம் என்றார்கள். சீகேம், அவன் தகப்பன் ஏமோரும் அதற்கு உடன்பட்டார்கள். அதன்படி அவர்கள் விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள். ஆனாலும் இங்கு யாக்கோபுவின் புத்திரர் வஞ்சகமாக இந்த சூழ்ச்சி செய்து சீகேமின் ஜனங்களை கொன்றுபோட்டார்கள்.

116. ஆனாலும் தீனாளை, சீகேமுக்கு கொடுக்க அவர்கள் செய்த காரியம் நியாயமானதே. விருத்தசேதனம் இல்லாதவர்களுக்கு, விருத்தசேதனம் உள்ளவர்கள் பெண் கொடுப்பது, பெண் எடுப்பது சரியல்ல. ஆதலால் விருத்த சேதனம் இல்லாதவர்களையும் விருத்தசேதனம் செய்ய வைத்து பெண் கொடுப்பது, பெண் எடுப்பது சரியானது ஒன்றே. அந்த முறைப்படி ஒரு அவிசுவாச குடும்பத்திற்கு சத்தியத்தை எடுத்துக்கூறி, அவர்களை விசுவாசத்திற்குள் கொண்டு வந்து, அவர்களை சத்தியத்திற்கு கீழ்படியச்செய்து பெண்கொள்வது, பெண் கொடுப்பது சரியான காரியமே. நியாயமான காரியமுமாகும்.

117. நான் என்றுமே எந்த ஒரு ஜாதியையும், குலம், கோத்திரத்தையும் இழிவுபடுத்தி, குறைகூறி எழுதினதோ, பேசியதோ, பிரசங்கித்ததோ, உபதேசித்ததோ கிடையாது. அவைகள் என் இருதயத்தில் தோன்றவும் இல்லை. அப்படிப்பட்ட சிந்தனைகள் என் உள்ளத்தில் என்றுமே தோன்றாது. காரியம் இப்படி இருக்க என்னை ஒரு ஜாதி வெறி பிடித்தவன், என் ஜாதி அல்லாத இதர ஜாதிகளுக்கு நான் விரோதி போன்ற வதந்திகளை உங்களிடத்தில் ஒருவன் கொண்டுவந்தானானால் அவன் ஒரு பிசாசு. அவனுக்கு செவிகொடுக்காதீர்கள். பிசாசாகிய கோவை ராஜா இப்படிப்பட்ட வதந்திகளை உங்களுக்குள் கொண்டு வந்ததை நீங்கள் அறிவீர்கள். பிசாசு இக்காலத்திற்குரிய செய்தியிலுள்ள மக்கள் மத்தியில் என் வாசனையை கெடுக்க, வஞ்சகமாக தீட்டிய ஒரு திட்டமாகும் அது. அது ஒருகாலமும் நிலைத்தும் நிற்காது.

**118. காரியத்தின் கடைத்தொகையை கேட்போமாக. கலப்புத்திருமணத்திற்கு வேத வாக்கியங்களில், இக்காலத்திற்குரிய செய்தியில் எங்குமே இடமில்லை. ஆதாரம் இல்லை. இக்காலத்திற்குரிய செய்திக்குள் நுழைந்த ஸ்தாபன பெந்தெகொஸ்தே ஊழியர்கள், விசுவாசிகள் தங்கள் பாரம்பரிய உபதேசத்தை கொண்டுவந்து அந்த புளித்தமாவை இங்கு, இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள மக்கள் மத்தியில் கொண்டு வந்து அவர்களை கலக்குகிறார்கள். அதுதான் உண்மை.**

119. ஆதலால் கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே, இதுவரை கலப்புத்திருமணம் குறித்து நான் எழுதிய புத்திமதியான வார்த்தைகளை நீங்கள் பொறுமையாய் ஏற்றுக்கொள்ளும்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் உங்களை கேட்டுக்கொள்கிறேன். கலப்புத் திருமணம் கலப்பினை ஒத்தது. தேவனுடைய சபையில் பல இனம், குலம், கோத்திரம் மக்கள் உண்டு. நாம் அனைவரும் சகோதரர்களாகவும், சகோதரிகளாகவும் இருக்கிறோம். அது கிறிஸ்துவுக்குள் நாம் ஒரே சரீரம் என்பதை எடுத்துக்காட்டுகிறது. ஆனால் நம்முடைய உலக பிரகாரமான இப்பிரஞ்ச வாழ்க்கையில் பல இனம், குலம், கோத்திரங்கள் உண்டு. அவர்கள் தங்கள் இனம், குலம், கோத்திரத்தையே திருமண காரியத்தில் சார்ந்திருப்பது நலம். அது ஒரு ஆரோக்கியமான ஒன்றும் ஆகும். நீங்கள் சத்தியத்தை அறிவீர்கள், அது உங்களை விடுதலையாக்கும். கிருபையானது உங்கள் அனைவரோடும் கூட என்றென்றைக்கும் இருப்பதாக. ஆமென்.

ஏப்ரல் / மே, 2006

கிறிஸ்துவின் அன்பில்
**சகோ. காலேப் யோசுவா**